★ ★

12 பக்கங்கள் விலை 50 காசு

நம் நாடு

ஆசிரியர்: மு. கருணாநிதி

“NAM NADU” Official Organ of the D. M. K.

மலர்-2 | திருவள்ளுவர் ஆண்டு 2009 10—12—1978 | இதழ் 13



புனித ராஜ்யம்

காட்சி - 15

—தொடர்ச்சி—

[பாலம்மாள் வீடு — பாலம்மாளிடம் சுந்தரி ஆத்திரத்துடன் பேசி விட்டு விடை பெற்றுக் கொண்டு புறப்படும் போது அண்ணாச்சி, நொண்டி, போலீசார் உள்ளே நுழைகிறார்கள். சுந்தரியென்ற பெயரில் இருக்கும் சொக்கியைப் பார்த்ததும், நொண்டிக்கும் அண்ணாச்சிக்கும் எல்லையற்ற வியப்பு ஏற்படுகிறது. சுந்தரிக்கு விஷயம் விளங்கிவிட்டது. அவர்களை எப்படியாவது சமாளித்துப் போலீசாரிடமிருந்து தப்ப வேண்டுமென்று அவள் மனதுக்குள் திட்டம் போடுகிறாள். பாலம்மாளோ பயந்து நடுங்குகிறாள். அவள் போலீசாரைப்பார்த்து “வாங்க சார்! உட்காருங்க!” என்று நாற்காலிகளை இழுத்துப் போடுகிறாள்.)

போலீசார்: உஸ்! எங்களுக்கு எந்த உபசாரமும் தேவையில்லை. நாங்கள் கடமையைச் செய்ய வந்திருக்கிறோம். (என்று கடுமையாகப் பேசுகிறார்கள்.)

சுந்தரி: (நொண்டியைப் பார்த்து) எப்ப வந்திங்க? உங்களைப் பாத்து ரொம்ப நாளாச்சு! (புன்னகை புரிகிறாள்) இதுதான் எங்க அத்தை! அருமையான அத்தை! நான் இப்ப இவுங்க வீட்டிலே தான் இருக்கேன்! நான் உங்க பேச்சைக்கேட்காம ரொம்ப கஷ்டப்பட்டுப் போய்ட்டேன்!

அண்ணாச்சி அய்யா! நமஸ்காரம்! என்னடா இது; சொக்கி, பட்டணத்தில இருக்காளேன்னு ஆச்சரியப்படுறீங்களா? நான் இங்க வந்த கதையே பெரிய கதை! நான் அந்த சுந்தரத்தை ரொம்ப நல்லமனுஷன்னு நம்பி பின்னால வந்தேன். அந்த ஆள் என் நகை நட்டுக்களையெல்லாம் ஏமாத்திப் பிடுங்கிக்கிட்டதுமில்லாமல் பிராந்தி பாட்டிலு வியாபாரம் வேற பண்ணிப் போலீசு கிட்ட மாட்டிக்கிட்டாரு! இப்பஜெயில்கம்பிஎண்ணுறாரு! யாரு? பெரிய போலீஸ் எஸ்.பி.! அதாவது - முன்னாள் — அதாவது மாஜி போலீஸ் சூப்பிரண்டண்டு! உங்களைப் போல தங்கக் குணம் படைச்சவங்களைப் பத்தி நான் தவறு நினைச்சு — நானும் என் தாத்தாவும் செய்த தப்புகளுக்கு சரியான தண்டனை கிடைச்சது! இப்ப எங்க அத்தை தான் எனக்கு தெய்வம் மாதிரி. இந்தத் தெய்வத்தோட கோயில்ல பூஜைக்கு வந்துள்ள மலர் நான்!

அண்ணாச்சி: இந்த மலரின் மணம் நுகரலாமோ?

சுந்தரி: தெய்வத்துக்குப் படைக்கிறது பூராவும் பக்தர்களுக்குத்தானே!

பாலம்மாள் சக்திபடைத்த தெய்வமாச்சே! இந்தக் கோயில் சன்னதியிலே சிங்கமும் சுண்டெலியாகும், நாய்வாலும் நிமிரும்! இல்லியா பாலம்மா? (சிரித்துக் கொண்டே)

பாலம்மாள்: அதையேன் கேக்கிறீங்க? இந்தப் பொண்ணை ஒரு பிசாசு பிடிச்சு இருந்திருக்கு! நம்ப வீடுதான் தேவாலயம் மாதிரி புனிதமான இடமாச்சே! இந்த வீட்டுக்குள்ள பிசாசு நுழைய முடியுமா? அதுவும் நம்ப பாத்ரூம்ல குழாயில கொட்டுற தண்ணி, அசல் கங்கா ஜலம் மாதிரி! உங்களை உட்கார வச்சுட்டு இவளை பாத்ரூம்ல குளிக்கப் போகச் சொன்னேனா! அப்ப இவ தலையிலே நம்ப வீட்டு கங்காஜலம் பட்டதும் அந்தப் பிசாசு இவளை விட்டுட்டு ஓட ஆரம்பிச்சுருக்கு! அது ஓடின வேகத்திலேயும் ஆடுன ஆட்டத்திலேயும் நீங்க பயந்துகிட்டீங்க! அதுக்கப்பறம் பார்த்தா என் சொக்கிக் கண்ணு — சுந்தரி குட்டி-ஞானஸ்னானம் பெற்றவமாதிரி நான் சொன்ன புத்திமதியெல்லாம் கேட்க ஆரம்பிச்சுட்டா! உங்க இரண்டு பேரையும் புகழ்ந்திருக்கா பாருங்க! ஒருத்தரு நடராஜா அத்தை!

கலைஞர் கருணாநிதி

அண்ணாச்சி: (நொண்டியைப்பார்த்துகண்சிமிட்டி ஆனந்தமுடன்) ஏ! நொண்டி! சொக்கி! ஆளே மாறிட்டுதே!

நொண்டி: இதோ இந்த

இன்னொருத்தருக்கு தியாகராஜா அத்தை! அப்படி இப்படின்னு உங்களைப் பத்தி வர்ணிச்சு கொட்டிட்டா! இப்ப பாருங்க! இந்தப்

(தொடர்ச்சி 11-ம் பக்கம்)

வாழ்க இராஜாஜி புகழ்!



மூதறிஞர் இராஜாஜி அவர்களின் நூற்றாண்டு விழா நாடெங்கும் கொண்டாடப்படுகிறது. நாட்டின் விடுதலைப் போராட்டத்தில் பங்கு கொண்டும், விடுதலைக்குப் பின் கவர்னர், கவர்னர் ஜெனரல், மத்திய அமைச்சர் மாநில முதல்வர் ஆகிய பல்வேறு முக்கிய நிருவாகப் பொறுப்புக்களை ஏற்றும், இராஜாஜி அவர்கள் ஆற்றிய அரும்பணிகளை இன்று நாடு நினைவு கூறுகிறது.

தமது இறுதிமூச்சு வரை நாட்டு மக்களுக்காகவே எழுதியும், பேசியும் நல்லுரைகள் வழங்கியும் வந்த தலைசிறந்த அரசியல்மேதையான மூதறிஞர் இராஜாஜி அவர்கள் நாட்டின் வரலாற்றில் தனியிடம் பெற்று விட்டவராவர்.

வாழ்க அந்த வரலாற்று நாயகரின் புகழ்!

கலைஞரைப் பின்பற்றுங்கள்!

கலவரம் நிற்கும்!

லெனின்

நாடாளுமன்றத்தின் குளிர் கால தொடர் கூட்டம் விறுவிறுப்பாக நடந்து கொண்டிருக்கிறது. சமுதாயத்தின் ஆணிவேரை அறுக்கின்ற போக்கில் இன்று நாடெங்கும் வகுப்புக் கலவரங்கள் நடந்தபடி உள்ளன.

ஆட்சியிலே உள்ளவர்கள் அணுகும் முறையோ புண்ணுக்குப் புனுகு போடும் போக்கிலே அமைந்து வருகிறது

காங்கிரஸ கட்சி நாட்டில் முப்பதாண்டுக்காலம் ஆட்சி நடத்தியிருக்கிறது. 'தேசீய நீரோட்டம்' பற்றி தினம், தினம் ஆட்சியிலே உள்ளவர்கள் அறிக்கைகள் விடுவதும் மேடையிலே முழங்குவதும் கொஞ்சமல்ல! தேசிய நீரோட்டம் தடையின்றி நிகழ்ந்துவிடும் என்று எண்ணிக் கொண்டு தங்களைத் தாங்களேஏமாற்றிக்கொண்டு வந்திருக்கிறார்கள்.

மத்திய ஆட்சியிலே இருந்தவர்களும்,இப்போது இருப்பவர்களும் தங்களுக்குப் பிடிக்காத கட்சியின்மீது பழியைச் சுமத்தப்பயன்படுத்திய வெடிகுண்டே தேசிப நீரோட்டமாகும்.

இந்த நாட்டின் நல்வாழ்வுக்கும் முன்னேற்றத்திற்கும் முட்டுக்கட்டையாக இருந்து வருவதே தலைவிரித்தாடிவரும் சாதிகளும், சனாதனவாதிகளுந்தான் என்பதில் இரண்டுவிதக் கருத்துக்கு இடமேயில்லை.

நாட்டை ஆண்ட கட்சியாயினும், ஆளுகின்ற கட்சியாயினும் சாதிகளை ஆழக் குழி தோண்டிப் புதைப்பதில் சாதித்த சாதனையென்ன?

சனாதனவாதிகள் தாண்டவம் ஆட ஆட்சியில் உள்ளவர்கள் தாளம் போடுவதைத் தவிர தீவிரமாகச் செயல்பட்ட திட்டங்களென்ன? நாட்டின்பல்வேறு பகுதிகளில் நடந்து வருகின்ற வகுப்புக்கலவரங்கள் தொடர்கதையாக ருக்கிறதே இதை அறவே ஒழிக்க எடுக்க வேண்டிய நடவடிக்கை என்ன என்பது பற்றி நாடாளுமன்றத்தில் இரண்டு நாட்கள் விவாதம் நடந்தது.

வகுப்புப் பூசல்களை அறவே களைந்திட ஆக்க பூர்வமாக வழிகாண வருகிற 17-ஆம் நாள் சர்வகட்சி கூட்டம் நடத்தப் போவதாகத் தலைமை அமைச்சர் மொரார்ஜிதேசாய் அறிவித்துள்ளார்.

"சிறுபான்மை வகுப்பினரின் வாழ்க்கை பாதுகாக்கப்படும் வகையில் எந்தத் தீர்வு முறையும் அமைந்தால்தான் சமூகத்தில் வகுப்புமாச்சரியங்களுக்கிடமில்லாத சூழ்நிலை அமையும்'' என்று கருதப்படுகிறது. அதுதான் என்றைக்கும் நிலைத்து நிற்கக்கூடிய சமூக நீதியாக இருக்க முடியும்என்றும்சொல்லப்படுகிறது அப்படியென்றால் அதற்குவழி வகை என்ன?

வகுப்புக் கலவரங்கள்நடைபெறுகின்ற வடமாநிலங்களில் இதற்கு எடுத்த தடுப்பு நடவடிக்கை போலீஸ் நடவடிக்கையாகவே இருந்து வந்திருக்கிறது. துப்பாக்கி வெடிசப்தம் காதுகளை துளைத்தபடியே உள்ளது.

குறிப்பாக இந்து-முஸ்லீம் கலவரமும், சாதிஇந்துக்களுக்கும் இந்து ஆதித்திராவிடர்களுக்கும் இடையேதான் பெரும்பாலும் கலவரங்கள் நடந்தபடி உள்ளன.

சமுதாயத்தில் இந்துக்களும் முஸ்லீம் மக்களும் சரிசமமாக வாழ்ந்திட சமஉரிமை அளிக்கப்படவேண்டும் அதைபோலவே இந்து மேல்சாதிக்காரர்கள் வாழ்கின்ற நிலைக்கு ஒப்பாக ஆதித்திராவிட குடிமக்களும் வாழ்ந்திட சம உரிமை அளிக்கப்படவேண்டும்.

தமிழ்நாட்டைப்பொறுத்தவரையில் இப்படிப்பட்ட கலவரங்கள் விரல்விட்டு எண்ணக்கூடிய சம்பவங்களாகத்தான் நடந்திருக்கின்றன. அவை உரிமையின் அடிப்படையில்எழுந்தபிரச்சினையாகஇருக்கவில்லை மற்ற மாநிலங்களில் குறிப்பாக வடமாநிலங்களில் நடப்பதை போன்றுஅடிக்கடி வகுப்புக் கலவரங்கள் நடைபெறுவதைதமிழகத்தில்காண முடியாது.

சமுதாயத்தில் சமஉரிமை அளிக்கும் வகுப்புவாரிப்பிரதிநிதித்துவம் காங்கிரஸ் கட்சி ஆட்சிக்கு வருவதற்கு முன்பாகவே தமிழ்நாட்டில் நீதிக் கட்சி ஆட்சியில்இருந்தபோது கொண்டு வந்தது. தந்தை பெரியார் அவர்கள் தென்னகத்தில் அறுபதாண்டு காலம் மதத்தால் விளையும் தீமையைச் சாடிவந்தார். சாதிகளால் விளைந்து வரும் கேடுகளைச் சாடிவந்தார். சாதிக் கொடுமைகள் அழிந்த நிலையை உருவாக்கினர்.

பேரறஞர் அண்ணா உருவாக்கிய ஆட்சியில் டாக்டர் கலைஞர் முதல்வராக ஏழாண்டு காலம் ஆட்சி நடத்தியபோது ஆதித் திராவிட மக்கள் கல்வித்துறையில், வேலை வாய்ப்புத்துறையில் இன்ன பிற வகையில் ஏற்றம் காண மற்ற உயர்சாதி மக்களோடு இணைந்து வாழ அதிகமான வாய்ப்புகளை உருவாக்கினர்.

வேலை வாய்ப்புஆதித் திராவிட மக்களுக்காக 31 சதவிகிதத்துக்கு உயர்த்தினர் வேலை உயர்வில் சிறப்பிடம் அளித்தார்.

ஆதித்திராவிட மக்களுக்கு தனியாக வீட்டு வசதிக் கழகம் கண்டார். முப்பதாயிரம் வீடுகளுக்கு மேல் கட்டித் தந்தார். திட்டம் தொடர முடியவில்லை, காரணம் ஆதிக்கவாதிகள் ஆட்சியை கலைத்து விட்டதுதான்.

கடந்தஒருநூற்றுண்டில்நடைபெறுத புதுமையைச் செய்து காட்டினர் நீதிபதிகள் உயர்ந்த சாதிகாரர்களாகவே நியமனம் பெற்று வந்ததை நிறுத்தி ஆதித்திராவிட குடிமகன் ஒருவரை பின்தங்கிய சமூகத்தைச் சார்ந்தவர்களை நீதிபதிகளாக நியமித்து வருவதன் மூலமே சமுதாயத்தில் உள்ள ஏற்றத் தாழ்வினைச் சரிப்படுத்த சாதனைகளைச் செய்து காட்டினர்.

அம்பேத்காரின் இலட்சியத்தை நிறைவேற்றித் காட்டினர் கலைஞர்

தன்னுடைய மகனுக்கு ஆதித்திராவிடக் குடியிலிருந்து பெண்ணை எடுத்து திருமணம் செய்வித்து சமுதாயத்தில் புரட்சியைச் செய்துகாட்டினர்.

ஆதித்திராவிட மக்கள் சமநிலை பெற்றிட அரிசனங்களும் கோயிலில் அர்ச்சகராகலாம் என்று சட்டம் கொண்டு வந்தார். அதை உச்ச நீதிமன்றம் முடக்கி விட்டது! அரசியல் சட்டம் 14 வது பிரிவுப்படி இந்துவும் அரசன மக்களும் சமம் என்பது எங்கே!

காந்தியார் இந்து முஸ்லீம் பற்றிப் பேசிப்பார்த்தார். காந்தியின் உயிரையே அது குடித்துவிட்டது. வட நாடு அந்நிலையில் இருப்பது உலகுக்குத் தெரிந்ததுதான் மிச்சம்!

ஆதி திராவிடர்களிடையே பிரிவினையையும்,பேதத்தையும் ஒழித்தால்தானே நாட்டில் கலவரங்கள் ஏற்படாமல் தடுக்க முடியும். அர்ச்சகர் சட்டம் செல்லுபடியாக நாடாளுமன்றம் நடவடிக்கை எடுக்க வேண்டாமா?

அரசியல் சட்டம் 14 வது பிரிவுப்படி அனைத்து இந்திய மக்களும் ஆட்சியின் முன்னல் சம உரிமை பெற்றவர்கள் என்று ஏட்டில் இருந்து விட்டால்போதுமா?நடைமுறைப் படுத்த வேண்டாமா?

முஸலீம் சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் தமிழ்நாட்டில் மற்ற மக்களோடு இரண்டறக் கலந்து நீண்ட காலமாகவே வாழ்ந்து வருகிறார்கள். உறவு முறைகூறி அன்பால்பிணைந்து வாழ்ந்து வருவதை கண்கூடாகக் காணமுடிகிறது.

முஸ்லீம் மக்களுக்கும் சமுதாயத்தில் சமநிலையில் வாழ்ந்திட உரிமைகள் வழங்கப்பட்டு உள்ளன. அவர்களில் பின்தங்கிய மக்களுக்கும் முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது.

தி. மு. கழகத் துணைப் பொதுச் செயலாளர் தோழர் ஏ.வி.பி.ஆசைத்தம்பி நாடாளுமன்றத்தில் வகுப்புக் கலவரங்கள் நடைபெறுமல் இருக்க வழிவகைகளை எடுத்துக் கூறியிருக்கிறார்.

இன்றையநிலை நீடித்தால் ஆதி-திராவிடஸ்தான் ஏற்பட நேரும் அபாயத்தைச் சுட்டிக்காட்டியிருக்கிறார்

இந்து — முஸ்லீம் கலவரங்கள் அடிக்கடி நடைபெறுகின்ற உத்தரபிரதேசத்திற்கும் ஒரு திட்டத்தைக் கூறி வழிகாட்டியிருக்கிறார்.

மொத்தத்தில் — வகுப்புக் கலவரங்கள் நடை பெறுமல் இருக்கவேண்டும். இந்தியாவின் நடைமுறைக் கொள்கையாக கலைஞரை பின்பற்றுங்கள் கலவரம் நிற்கும்

****
**
*

காரைக்கால் வாசகர்கள் கவனத்திற்கு

காரைக்கால் பகுதிக்கு நம்நாடு விற்பனையாளராக தோழர் "அல்லாபிச்சை, அம்பாள் சைக்கிள் கம்பெனி. 335 பாந்தியார் வீதி, காரைக்கால்'' என்பவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

பிரதிநிதி;
கே எம். ஜி. மாதவன்
11,புதுத்தெரு. மைலாப்பூர்
சென்னை-4

துறவிகளும் ஆர்த்தெழுந்து இந்தியை விரட்டியடித்த அந்த நாள் வரலாறு!

‘வீட்டைத் துறந்தாலும் நாட்டை துறந்திட மாட்டோம்!’

1936-37 ஆம் ஆண்டு நடந்த இந்தி எதிர்ப்பு இயக்கத்திற்கு மூன்றாவது சர்வாதிகாரியாக இருந்து நடத்தி இரண்டாண்டுச் சிறைத்தண்டனை ஏற்றவர் சுவாமி அருணகிரிநாத அடிகளார்.

இருபதாண்டுக்குப் பிறகு-22–5–57 ல் திருவண்ணாமலையில் தி. மு க சார்பில் நடைபெற்ற இந்தி எதிர்ப்பு மாநாட்டிற்குத் தலைமை தாங்குமாறு பேரறிஞர் அண்ணா அவர்களால் அழைக்கப்பட்டார், அருணகிரி அடிகளார் அண்ணாவின் அழைப்பை ஏற்று மாநாட்டுத் தலைமை வகித்து அவர் ஆற்றிய உணர்ச்சி மிக்க உரையின் ஒரு பகுதி இங்கு தரப்படுகிறது.

திருவண்ணாமலை இந்தி எதிர்ப்பு மாநாட்டில் அருணகிரி அடிகளார் ஆற்றிய உரை

தமிழ்நாட்டுக்கு இந்தி பொதுமொழியாகத் தகுதியில்லை என்ற போரைச்செய்வதற்காகக் கூட்டியுள்ள இந்த மாநாட்டிற்கு என்னைத் தலைமையாக இருந்து நடத்துமாறு இங்கு மாலைபோட்டு விட்டிருக்கிறார்கள். ஏனென்றால் பலிக்கடாவுக்கு முதலில் வேப்பஞ்சேலை கட்டுவது கழுத்திலே மாலைபோடுவது, குங்குமப்பொட்டு வைப்பது கொண்டுபோய் பலி பீடத்திலே வைத்து வெட்டுவது வழக்கம் அதுபோல தமிழ்த் தாய்க்காகநீபலியாகு! தமிழ்த் தாயினுடைய வளர்ச்சிக்காக உன்னுடைய உயிரைத் தியாகம் செய்! நீ தியாகம் செய்தாயேயானால் உன்னைச் சார்ந்த உன் இனத்தவராகிய இளைஞர்களெல்லாம் 'தியாகம் செய்யக் கற்றுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே நீ வந்து முன்னே நில் என்பதாகமாலை போட்டுவிட்டிருக்கிறார்கள்.

அன்பர்களே! நீங்கள் எல்லாரும் தமிழ்நாடு, தமிழ் மொழி, தமிழர் குணம், தமிழர் நலம், தமிழருடையஉரிமை ஆகியவைகளைக் காக்க — உணர்ச்சியால், எழுச்சியால்— அதற்கானவன செய்யவேண்டும். இதற்கு எத்தனைத் தடைகள் இருக்கின்றனவோ அவைகளையெல்லாம் ஒழிக்கவேண்டும் என்று கங்கணம் கட்டிக் கொள்வதற்காக இங்கு வந்து குழுமியிருக்கிறீர்கள் என்று நினைக்கிறேன். ஆகையினாலே, இத்தகைய ஒரு பெரும் நிகழ்ச்சியில் என்னையும் உங்களில் ஒருவனாக ஏற்று, தலைமை தாங்கச் செய்தமைக்காக — இந்தச் சிறப்புகளுக்கெல்லாம் என்னை ஆளாக்கிய திராவிட முன்னேற்றக் கழகத்துக்கும், கழகத் தோழர்களுக்கும், கழகத் தலைவர்களுக்கும் உளமார்ந்த நன்றியறிதலாகிய வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நிகழ்ச்சிக்காகவேண்டி இங்கு அமைத்திருக்கிற பந்தலைப் பார்த்தாலே, திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்களுடைய திறமை இன்னது என்று விளங்கும். அவர்கள் செயலாற்றும் திறமையைத் தமிழ்நாட்டில் இளைஞர்கள் பெற்றிருப்பது கண்டு நான் மகிழ்ச்சியடைகிறேன்.

காவியுடையும், உருத்திராட்சமும், விபூதியும் அணிந்திருக்கும் என்னை இங்கு அழைத்து திராவிட முன்னேற்றக் கழக மாநாட்டிற்குத் தலைமை வகிக்கச் செய்திருப்பது பொருத்தமில்லை என்று சிலர் நினைக்கலாம்.

இதற்கு இந்த இயக்கத்தார் என்மேல் கொண்டுள்ள பழைய நேசமும் பரிசமுமே காரணம்; வேறொன்றுமில்லை. ஆனால் பொதுவாக ஒரு கொள்கை என்னவென்றால் இந்தச் சன்னியாசி உலகம் இருக்கிறதே அது தமிழ்நாட்டுக்கு நல்லமுறையில் பயன்படும் வகையில் நடந்துகொள்வதில்லை என்பது ஒரு குற்றச்சாட்டு. அதை நான் மிகவும் ஏற்றுக்கொள்கிறேன். ஆகையினாலே என்னை அந்தக் கூட்டத்தோடு சேர்த்து விடாதீர்கள். நான் தமிழ்மறக்குடியில் பிறந்தவன்.

“வீட்டைத்துறந்துசென்ற வீரத்துறவியுந்தான் நாட்டைத் துறப்பானோடி—தமிழ்த் தங்கமே நயவஞ்சம் செய்வானோடி?” என்று நானே பாடியிருக்கிறேன்.

ஆகையினாலே வீட்டைத்தான் துறந்து சென்றேன்; என்தாய் நாட்டை, தாய் மொழியை, என்னுடைய இனத்தைத் துறந்து சென்று விடவில்லை. என்னுடைய இனந்தானே இன்றைக்கு எனக்குச் சோறு போடுகிறது! அதனாலே அதைத் துறந்து சென்று விடவில்லை. அப்படி ஒருவன் போவானேயானால் நன்றி அவன் கொன்றவன் ஆவான். அவனுடையதுறவுஅவன் நாட்டுக்கும், இனத்துக்கும் பயன்படவேண்டும். அப்படிப் பயன்படவில்லையானால்அதுதுறவு அல்ல.

அதனாலே அந்நெறியில் நின்று நான் என்னாலே வேண்டிய தொண்டுகள் எவ்வளவு செய்யவேண்டுமோ அவ்வளவும் செய்து நான்இப்பொழுது ஓய்வு பெற்றிருக்கிறேன்.

இங்கு குழுமியுள்ள இளைஞர்களுக்கு தமிழ்நாட்டுக்கு, தமிழ்மொழிக்கு நான் செய்த சேவைகளை அறியமுடியாது. முப்பது வயதுக்கு மேற்பட்டவர்கள்தான் என்தொண்டு இன்னது என்று அறிந்திருக்க முடியும்.

அந்தக் காலத்தில் ‘தமிழ்நாடு தமிழருக்கே’ என்றுநாம் சொன்ன நேரத்தில் கிண்டல் சித்திரம் எழுதிய ஆனந்த விகடனும், ‘எலி வலை எலிகளுக்கே’ என்றவர்களும், இன்று நம் கொள்கை வழி வரத் துவங்கியிருக்கிறார்கள்.

1937 வரை நான் காங்கிரசுக்கு உழைத்திருக்கிறேன். காந்தியடிகளை வரவேற்றுவட சென்னையில் ஒரு கூட்டம் போட்டு வாழ்த்துப் பாடிக் கொடுத்தவன் நான்.

‘1937-ல் நூறு பள்ளிகளிலே இந்தியைக் கட்டாயமாகத் திணிக்கப்போகிறேன்’ என்று அறிக்கை விட்டார் இராசகோபாலாச்சாரியார். நாங்கள் நூறு பேர் சேர்ந்து மாம்பலத்தில் ஆச்சாரியார் பேசிய கூட்டம் ஒன்றிற்குச் சென்றோம் நான் ஆச்சாரியாரைக் கேட்டேன், ‘தமிழ்த் தாய்க்கு ஒரு நோயைக் கொண்டு வந்து புகுத்துகிறீர்களே, அது நல்ல நோயல்லவே; தொழு நோயாய் இருக்கிறதே, தொழுநோய் பிடித்தால் கைகால்களெல்லாம் குறைந்துபோய்விடும் என்பார்களே; எத்தனையோ பேரெல்லாம் வந்து எங்கள் தாயின் உடலிலே அம்மை வார்த்ததுபோல் புள்ளிகள் விழுந்திருக்கின்றனவே” என்றேன்.

இங்கு என்னென்ன மொழிகள் வந்தன? துலுக்கர்கள் மொழி, ஆங்கிலம், வடமொழி ஆகியவை வந்தன. இதனாலேயே தமிழ் குலைந்தது. இது போதாது என்று இந்தி மொழியெனும்தொழுநோயையும் கொண்டுவந்து புகுத்துகிறீர்களே என்று சொல்லி, அதனால் ஏற்படும் கெடுதல்களையெல்லாம் எடுத்துரைத்தேன். ‘இந்தியினால் தமிழுக்குக் கெடுதல்கள் வராது என்று சொல்லுங்கள்’ என்றேன் அதற்கு அவர் கொஞ்சம் பொறு. பத்து நிமிடங் கழித்து உனக்குப் பதில் சொல்லுகிறேன்’ என்றார். இறுதிவரை காத்திருந்தேன். அதற்குள் போலீசைத் தருவித்து விட்டார். கலவரம் செய்ததாகக் கூறிப் போலீசார் அடக்க வந்துவிட்டார்கள். அத்தோடு காங்கிரசு ஒழித்துவிட்டதாகக்கூறி நானும் காங்கிரசுக்கு முழுக்குப் போட்டுவிட்டு விலகி வந்து விட்டேன். அன்றுமுதல் நான் இந்தி எதிர்ப்பு இயக்கத்தில் ஈடுபட்டேன்.

“அந்தக் காலத்தில் நாங்கள் ஆச்சாரியாரை கிறுகிறுக்கப்பண்ணினோம். பல்லடம்பொன்னுசாமி என்னும் இளைஞர் ஆச்சாரியார் வீட்டு முன் உண்ணாநோன்பு இருந்தார். அப்பொழுது மழை பெய்துகொண்டிருந்தது. அவ்விளைஞரின் காலில் பாம்பு ஒன்று வந்து சுற்றிகொண்டது. அப்போதும் அந்த இளைஞர் சற்றும் அஞ்சவில்லை. போலீசாரெல்லாம் வந்து அவ்விளைஞரிடம், பாம்பு சுற்றிக் கொண்டதைக் கூறி அப்பால் நகரச் சொன்னார்கள். அதற்கும் அவர் சிறிதும் அசையாமல் ‘நான் சாகத்துணிந்துதானே அறப்போரில் ஈடுபட்டேன்’ என்று கூறி உறுதியுடன் நின்றார். பிறகு அந்தப் பாம்பு தானே சென்றுவிட்டது. அவ்வளவு உறுதியுடன் அந்தக்காலத்தில் போராடினோம்.

“கோடம்பாக்கத்திலே மறைமலையடிகளார் தலைமையிலே சைதாப்பேட்டைவட்ட இந்தி எதிர்ப்பு மாநாடு நடந்தது, அங்கு சென்று உட்கார்ந்தேன், அங்கு செய்தி வந்தது. பல்லடம் பொன்னுசாமி கைது என்று உடனே நான் எழுந்து ஆச்சாரியார் வீடு நோக்கிச் செல்ல வேண்டும் என்று கேட்டுக்கொண்டேன். அப்பொழுது சி. டி. நாயகம் இந்தி எதிர்ப்புப் போருக்கு முதல் சர்வாதிகாரியாக இருந்தார், சுமார் இரண்டாயிரம் பேர் கொண்ட ஊர்வலமாக ஆச்சாரியார் வீடு நோக்கிச் சென்றோம். அங்கு சென்று எதிர்ப்பு முழக்கங்களை முழங்கி விட்டு மாம்பலம் வெங்கட நாராயணா சாலையில் இருந்த இந்தி எதிர்ப்புப் பாசறையை அடைந்தோம். போலீஸ்படையினரும் ஏராளமாக எங்கள் பின்னால் வந்தார்கள்,

அப்பொழுது எங்களுடனிருந்த சுவாமிசண்முகானந்த அடிகளைப் போலீசார் கைது செய்தனர். இரண்டாவது சர்வாதிகாரியான சழத்துச் சிவானந்த அடிகளையும் கைது செய்தனர், மூன்றாவது சர்வாதிகாரியாக நான் பணியாற்றினேன்,

நான் இயக்கத்தை நடத்திக்கொண்டிருக்கும்போது பெரியார் வந்தார். அப்பொழுதுதான் பெரியார் அவர்களுடன் இயக்கத்தில் பங்கு கொள்ளத் தொடங்கினார். நான் தனித் தமிழன். துறவியெனக் கருத வேண்டாம். துறவிக்கு வேந்தனும் துரும்பு என்பதைக் கருதி நான் அப்பொழுது எதற்கும் அஞ்சாமல் பணியாற்றி வந்தேன்.

பின்னர் என்னைக் கைது செய்தார்கள்! சத்யாக்கிரகத்தைத் தூண்டியதாக எனக்கு

(தொடர்ச்சி 10-ம் பக்கம்)

மத்திய அமைச்சர்கள் முன்னிலையில்

★ மாநில சுயாட்சி முழக்கம் ★

கருநாடகக் கருத்தரங்கில் கழகப் பொருளாளர் சாதிக்

எடுத்துரைத்த வாதம்!

(சென்ற இதழ் தொடர்ச்சி)

இரண்டாம் நாள் முற்பகலில் நடைபெற்ற கருத்தரங்கில் கழகக் கொள்கைகளும், கழகச் சார்பில் கலந்து கொண்ட பொருளாளர்சாதிக் பாட்சா அவர்களின் வாதங்களுமே தலையாய இடம் பெற்றுத் திகழ்ந்தன.

அன்று பிற்பகலில் நடைபெற்ற கருத்தரங்கிற்கு கருநாடக முதலமைச்சர் திரு. தேவராஜ் அர்ஸ் தலைமை வகித்தார். மத்திய சட்ட அமைச்சர்சாந்திபூஷன் சிறப்புரையாற்றினர்.

'மத்திய மாநில உறவு பற்றி நடைபெற்ற இக்கருத்தரங்கிலும், கழகத்தின் வலிவான வாதங்களும் பொருளாளர் சாதிக்பாட்சா அவர்களின் குரலுமே ஒங்கி ஒலித்தன. உறவுக்குக் கைகொடுப்போம்—உரிமைக்குக் குரல் கொடுப்போம்' என்று அன்றைய பிரதமர் இந்திராகாந்தி அவர்கள் முன்னிலையிலேயே சென்னையில் டாக்டர் கலைஞர் அவர்கள் முழக்கிய ஒலியை அன்றைய மத்திய அமைச்சர்கள் முன்னிலையில் மிகத்தெளிவாக நமது பொருளாளர் சாதிக் அவர்கள் எதிரொலித்தார். மத்திய-மாநில உறவுகளில் கணிசமான முன்னேற்றத்தை உடனடியாக மக்களுக்கு உணர்த்துவதற்கு முதற்படியாக, அரசியல் சட்டத்தின் 356-வது பிரிவைநீக்க வேண்டும் என்று அவர்எடுத்து வைத்த வாதத்தை சட்ட அமைச்சர் சாந்திபூஷன் வெகு உன்னிப்பாகக் கவனிக்கத் தவறவில்லை. மாநில அரசுகளைக் கலைத்து, குடியரசுத் தலைவர் ஆட்சியைஅமுல்படுத்துவதற்கு மத்திய அரசுக்கு அதிகாரம் வழங்குகின்ற இந்த சட்டப் பிரிவை எந்தக் கட்சியைச் சார்ந்த மத்திய அரசு மத்தியில் பொறுப்பேற்றாலும் பிரயோகம் செய்வதற்குதயங்காத தன்மையைச் சுட்டிக் காட்டினர்.

மாநிலங்களை மாநகராட்சிகளைப்போல் நடத்துவதற்கு மத்திய ஆட்சிக்குத் துணிச்சலைக் கொடுக்கும் அதிகாரக் குவியல் நாட்டின் ஒற்றுமைக்கும் ஒருமைப்பாட்டுக்கும்உலை வைக்கக்கூடியதாகஇருப்பதை அவர் ஒவ்வொன்ருக அடுக்கிக் காட்டிய அழகில், தலைமை வகித்த தேவராஜ் அர்ஸ் அப்படியே மெய்மறந்துவிட்டார் என்று சொல்லலாம்.

ஏனென்றல், மாநிலங்களுக்கு இருக்கும் அதிகாரங்கள் எவ்வளவு குறைவானவை என்பதை அவர் சார்ந்துள்ள கட்சிக்கு எதிர்ப்பான கட்சி மத்தியில் ஆட்சி புரிவதை யொட்டி ஏற்பட்டுள்ள அநுபவங்களின் விளைவு அது.

சர்வாதிகாரநடைபோட்ட இந்திரா காந்தியாலும், அந்தச் சர்வாதிகாரத்தைமுறியடித்து சனநாயகத்தை நிலை நாட்டுவதாகச் சொல்லிஆட்சி பீடம் ஏறிய ஜனதா அரசாலும் மத்தியிலுள்ள அதிகாரக் குவியலை மாநிலங்களுக்கு நியாயமாகப் பகிர்ந்தளிப்பதில் மறுப்புக்காட்டுவதை பொருளாளர் எடுத்துக் காட்டியபோதுஜனதாஅமைச்சர்கள் புன்முறுவல் காட்டினர்.

மாநிலத்தின் அத்தியாவசிய-உணர்வு பூர்வமான திட்டங்களை நிறைவேற்றுவதற்கும் மத்திய அரசின் குறுக்கீடு எவ்வளவு தொல்லைகளையும் — காலதாமதத்தையும் விளைவிக்கிறது என்பதைஅவர் சொல்லிக்கொண்டு வந்தபோது டாக்டர் கலைஞர்அவர்கள் அடிக்கடி தமிழக மக்களுக்குத் தெரிவித்துவரும் சேதிகள் சிலவற்றை பிறமாநிலப் பிரதிநிதிகள் மத்தியில் பொருளாளர் அழகுபட எடுத்துக் கூறினர்.

தஞ்சைப் பெரிய கோயிலில் இராசராசன் சிலையை அமைப்பதற்கும் மத்திய அரசின் அதிகாரக் குறுக்கீடு தமிழர்களுக்கு எத்தகு வருத்தத்தை அளித்தது என்பதை பொருளாளர் சொன்னபோது அந்த இராசராசனே வந்து ஆங்கிலத்தில் வாதிடுவது போல் இருந்தது.

அதேபோல், கிருஷ்ணகிரி அருகே மக்களுக்குக் குடிநீர் வழங்கக் குழாய்கள் புதைப்பதிலும் மத்திய அரசின் குறுக்கீடு மாநில அரசுக்கு எவ்வளவு சங்கடத்தை விளைவித்தது என்பதை பொருளாளர் சொன்ன போது, அனைவரும் ஏதோ ஒரு புதிய சேதியைக் கேட்பது போல் ஆர்வமாகக் கேட்டனர். பொருளாளர் அதனை எடுத்துச் சொன்ன பாங்கு "இப்போது அந்தத் திட்டம் எந்த நிலையில் இருக்கிறது?" என்று பெரும்பாலான பிரதிநிதிகள் சாதிக்அவர்களை பிறகு விசாரிக்கும் ஆர்வத்தைக்கிளறி விட்டது.

மத்திய ஆட்சிக்கும்மாநில ஆட்சிக்கும்இவைபோன்றவற்றில் ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க அரசியல் சட்டத்தின் 256-வது பிரிவின்படி மாநிலக்குழு (INTER STATE COUNCIL) அமைக்கப்பட வேண்டிய அவசியத்தை டாக்டர் கலைஞர் போன்றவர்கள் நெடுநாட்களாகத் தெரிவித்து வந்தும், இதுவரை அது போன்ற அமைப்பு ஏற்படுத்தப்படாததற்கு என்ன காரணம் என்று சாதிக் அவர்கள் கேட்ட கேள்வி 'விதான் சவுதா' கட்டிடத்தில் முட்டி மோதி எதிரொலித்தது,

மத்திய மாநில உறவுகள் பற்றி தற்போதுதான் புதிதாகப் பிரச்சினைகள் கிளப்பப்படுவதுபோல் சில பிரதிநிதிகள் பேசியதற்கு, சாதிக் பாட்சா அவர்கள் பதில் சொல்ல முனைந்து, அறிஞர்

அண்ணா அவர்களால் நெடுநாட்களுக்கு முன்பே மாநிலங்கள் அவையிலும் இந்தப் பிரச்சினையை எழுப்பி உரிய பரிகாரத்தை உடனடியாக காண வேண்டும் என்று கழகக் சார்பாக வலியுறுத்தப்பட்டுள்ளதைச் சுட்டிக்காட்டினர் அறிஞர் அண்ணாவுக்குப் பிறகு டாக்டர் கலைஞர் அவர்கள், இதற்கெனஎடுத்துக்கொண்ட முயற்சிகளையும், கூட்டிய மாநிலசுயாட்சி மாநாட்டையும் தமிழக சட்டமன்றத்தில் பேசிய பேச்சுக்களையும் எடுத்த முடிவுகளையும். அதற்கென கலைஞர்அவர்களால் அமைக்கப்பட்ட இராசமன்னர் குழு அறிக்கையின் சாராம்சத்தையும்பொருளாளர் தெளிவாக விளக்கினர்

மத்திய—மாநில உறவுகள் குறித்து மறுபரிசிலனை செய்வதற்கான உரியநேரம் இதுதான் என்பதையும், இன்னமும் நேரம் கடந்தாவ் நாம் அனைவரும் விரும்பத்தகாத விளைவுகள் எற்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என்றும் அழுத்தந் திருத்தமாகப் பேசினர்.

நாட்டின்ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டையும் குலைக்கும் முயற்சியில் யார் ஈடுபட்டாலும் அவர்களைநாம் அனுமதிக்கக்கூடாது. அத்தகு முயற்சியில் ஈடுபடுவதுமத்திய அரசாங்கத்தின் அதிகாரக் குவியலாகவும், இந்திமொழித் திணிப்பு நடவடிக்கையாகவும் இருத்தல்கூடாது என்பது தான் தென்னக மாநிலங்களின் கவலையாக இருக்கிறது என்று அவர் குரலை உயர்த்திக் குறிப்பிட்டபோது தலைமை வகித்த தேவராஜ் அர்ஸ் உட்பட அனைவரும் சற்றுநிமிர்ந்து உட்கார்ந்தனர்.

பலம் வாய்ந்த மத்திய அரசு தேவை என்பதையாரும் மறுக்கவில்லை. ஆனல், அந்தப் பலம்மாநிலங்களின்பலவீனத்திலிருந்து கிடைப்பதாக இருக்கக்கூடாது. பலவீனமான மாநிலங்கள் பலமான மத்திய அரசை உருவாக்க முடியாது,

இந்தியாவில் மாநிலங்களே இல்லாத பாவனையில் மத்திய அரசின் அதிகாரம் பலம் ஆகியவற்றைப்பற்றி மட்டுமே சிந்திப்பது இன்றைய அகில இந்திய அரசியல்வாதிகளின் 'பேஷன்' ஆகிவிட்டிருக்கிறது. இத்தகு தவருன கருத்தை மாற்றிக்கொண்டு, இந்தியா பலமாநிலங்களைக்கொண்டது பல மொழிகளைக்கொண்டது; பல பழக்கவழக்கமுள்ள மக்களைக் கொண்டது என்பதை அடிப்படையாகக் கொண்டு சிந்திபபதுதான் உருப்படியான பலன்களையும் ஒருமைப்பாட்டு உணர்வையும்வளர்க்கும்என்ற கருத்துப்பட பொருளாளர் சாதிக்பாட்சா அவர்கள்தமது வாதத்தை முடித்தபோது நிறைவானதோர் அரசியல் கருத்து அனைவரின் உள்ளத்திலும் ஆழமாகப் பதிந்த உணர்வு அங்கு பிரதிபலித்தது.

மொத்தத்தில் பெங்களூர் கருத்தரங்கம் டாக்டர்கலைஞர் அவர்களின் திட்டங்களுக்கும் கழகத்தின்கொள்கைகளுக்கும் பேராதரவு திரட்டும் வகையிலேயே அமைந்தது,

கற்றறிவாளர்கள்நிறைந்த அந்தக் கருத்தரங்கில் கழகத்தின்கொள்கைகளைத்திறம்பட எடுத்துரைத்த பொருளாளர் சாதிக்பாட்சா அவர்கள் பின்னர் அனைவராலும் அங்கு பாராட்டப்பட்டார்..

தோழன்

★

சேய் நலம் காக்கும் தாய்!

இந்திரா காந்தி நல்லவர்தான். இந்திரா காந்தியின் மகன் சஞ்சய் காந்தியும் அவருடைய 'காககூ'ம் தான் தீய சக்திகள். அதனை இந்திரா உணர்வார்; உணர்ந்து அத் தீய சக்திகளின் பிடியிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்வார் என்று எதிர்பார்த்தவர்கள் அதிர்ச்சி அடையும் செய்தியை இந்திரா வெளியிட்டுள்ளார்.

சஞ்சயின் பிடிதளர்கிறது என்பதற்கு எடுத்துக்காட்டாக சிக்மகளூர் தேர்தலுக்கு அவர் வரவில்லை என்பதை ஆதாரம்காட்டி ஆறுதல் பெற்றவர்கள் அதிர்ச்சி அடையும் செய்திபை பதேபூர் தேர்தல் பிரச்சாரத்திற்கு சென்று வந்த இந்திரா வெளியிட்டுள்ளார்.

"சஞ்சய்காந்தி அரசியலிலிருந்து விலகவில்லை. அவர் மீதுள்ள வழக்குகளைக் கவனிப்பதால் அரசியலில் தீவிரமாக ஈடுபட இயலவில்லை. சஞ்சயை நான் திணித்தேன் என்பது தவறு. அவரை மக்களே விரும்பினர்கள்" என்று இந்திரா கூறியுள்ளார்.

'சஞ்சய் அரசியலைவிட்டு விலகவில்லை. அவரை மக்களே விரும்பினர்கள்' என்பது சிறிய செய்தி. ஆனல் பெரிய விளைவை ஏற்படுத்தும் அனைவரும் உற்று கவனிக்க வேண்டும். உஷாராய் இருக்க வேண்டும்.

சிக்மகளூரில் ஜனநாயகத்தை

இந்திரா காந்தி ஆட்சியின் நெருக்கடி காலக் கொடுமைகளுக்குப் பலியான சிநேகலதாவின் மகள் நந்தனு, சிக்மகளூர் தேர்தலின்போது அனுபவித்த கொடுமைகளை விளக்கி 'சண்டே ஸ்டாண்டர்டு' ஆங்கில இதழில் எழுதியுள்ளார் அதன் தமிழாக்கம் வருமாறு:

[சென்றஇதழ் தொடர்ச்சி]

இதனிடையே அனந்த மூர்த்தி. சுஷ்மா சுவராஜ், வீரேந்திரா குமார், வேறு இருவரும் ஒரு காரில் வந்தனர். அவர்களும் வினுக்களை எழுப்பினர். காவற்துறை அதிகாரி திணறி "போங்கள் எதிர்ப்புத் தெரிவியுங்கள், எவ்வித கலாட்டாவும் ஏற்படாத வண்ணம்பார்த்துக்கொள்ளுங்கள் என்று கூறினுர்.

மிகவும் நல்லது;நாங்கள்எந்த கலாட்டாவிற்கும் இடமளிக்க மாட்டோம் எனத் தெரிவித்தோம். எப்படியாயினும் எங்கள்வாய் மூடப்பட்டவை போன்று இருந்தது. நாங்கள் விளக்க அட்டைகளைக் கையில் ஏந்தியவறே நின்றிருந்தோம்.

5-30 மணி அளவுக்குக் கடுமையாக மழை பெய்யத் தொடங்கியது. திருமதிகாந்திகாகக் கூடியிருந்தோர் சிலர் அக்கம்பக்கம் புகுந்தனர். மிகச் சிலரே மீதமிருந்தனர்.

யினர் கண்ணீர்ப்புகைக்குண்டுகள்— ஆயுதங்கள் கொண்டு வந்திருந்தனர்.

6 - 30 மணிக்கு, எங்களைச் சுற்றி வளைத்து நிற்க முற்பட்டனர். திருமதி காந்தி 7-40மணிக்குவந்தார்.மேடை செல்லும்போது எப்பொழுதும்போல் ஆரவாரமும் கைதட்டல்களும் இருந்தன. சிறிதளவு கோஷங்கள் எழுப்பினர். இரண்டரை மணி நேரமாக மழை பெய்தவாறே இருந்தது. சிறியஎண்ணிக்கையானவர்களே இருந்தனர்

நான் மேடை அருகேசென்றேன் மேடைக்கும் எனக்குமிடையே யாரும் இல்லை. அத்தருணத்தில்காவல்துறையினர் வேலி போன்று நின்று என்னை மற்றப் பெண்களிடமிருந்து பிரித்தனர்; திடீரென்று திருமதி காந்தியின் பாதுகாப்பாளர் சர்மாஉரத்த குரலில் 'போலீஸ் மாரோ மாரோ' (காவல்துறையினரே அடியுங்கள் அடியுங்கள்) என்று உத்தரவு பிறப்பிக்கிருர்.

அழைத்தனர், என் மேல் விழுந்தபடியே எனக்குப்பாதுகாப்பு அளித்து என் மீது விழுந்த அடிகள் யாவற்றையும் அவர்கள் தாங்கிக்கொண்டனர்.

அவர்களது முதுகுகளில் அடிகளின் தழும்புகள் மிகுந்திருந்தன. மருத்துவமனையில் சிகிச்சை பெற்றனர். அவர்கள் எப்படியோ சமாளித்து நின்றிருந்த எனது காரில் அழைத்துவந்து இருக்க செய்தனர். தடியேந்திகள் கார் செல்வதற்கு இடமளிக்காமலேயே காரின் முன் பக்கம் தடியால் தாக்கிக் கொண்டேஇருந்தனர்.இதைக் கண்ட இளைஞர்கள் அத் தடியேந்திகள் நடுவே அமைதியான முறையில் வழி விடச் செய்து, காரை பெல்தாநாத் பொது மருத்துவமனைக்குக் கொண்டு போகச் செய்தனர்.

அங்கு, அரசு மருத்துவர் மிகவும் மேலோட்டமான ரீதியில் எனக்குச் சிகிச்சை அளித்தார். எனது காயங்களைப் பரிசோதிக்கவும் கவலையுற்று அடைந்த அதிர்ச்சிக்கும் மருத்துவம் செய்யவில்லை.

எனது உடைகள் நனைந்திருந்தன. நடுங்கிக் கொண்டிருந்தேன் ஒரு படுக்கை மீது படுக்க வைத்து ஒரு துப்பட்டியால் போர்த்திவிட்டது மட்டும்தான், அவர்கள் அளித்த

உஜ்ரேயில், காவற்துறையினர் மிருகத்தனமானதுப்பாக்கிக் குண்டுக்கு இறையாக்கப்பட்டகல்லூரி மாணவி காயத்திரி

கண்டு. எங்களைத் தனியார் மருத்துவமனையில் சேர்ப்பிக்க முடிவெடுத்தார்.

கடைசியில் மறுநாள் 10 மணிக்குச் சிறிதளவு சிகிச்சை அளிக்கப்பட்டது. எஸ். பி சப்பிராஜு தனது துணையாளுடன் வந்து என்னைக் கண்டார். அவரும் வாக்குமூலம் எதையும் பதிவு செய்யவில்லை:

னல் நம்ப முடியவில்லை! 19 வயது கூட ஆகாத ஒரு இளம் பெண் எவ்வித எதிர்ப்பும் தெரிவிக்காது தனது வீட்டின் தாழ்வாரத்தில் புகைப்படம் எடுக்கச் சிலபத்திரிகையாளர்களை அனுமதித்தார் என்ற காரணத்திற்காக துப்பாக்கியால் சுடப்பட்டு கொலை செய்யப்பட்டது மிருகதன்மையானதும் வெறுப்புணர்ச்சி தூண்டக் கூடியதுமாகும். இச் சம்பவம் எனக்கு அதிர்ச்சியையும் நிலைகுலைவிப்பையும் ஏற்படுத்தியது.

அப்பெண் ஒரு அறையில் பூட்டி வைக்ககப்பட்டிருந்தும்,அதனைத்திறந்துகாவற்துறையினர் பூட்ஸ் கால்களால் உதைத்திருப்பது என்னல் சிறிதும் கற்பனை கூடச் செய்யமுடியவில்லை. இது மனிதத் தன்மை அல்ல.

எனது எதிர்ப்பு எந்த அளவுக்கு, ஜனதா கட்சிக்கு வாக்குகள் பெற்றுத்தரும்என்பதை திடமாகச் சொல்ல இயலவில்லை. நான் பெருமளவுக்கு தொகுதியைச் சுற்றிவர முடியவில்லை: ஆயினும் எனது முயற்சி திருமதி காந்தியின் மதிப்பைக்குறைத்தது என்பதைத்திடமாகச்சொல்கிறேன். அவரை அது நடுங்க வைத்தது. எனது இருத்தல் அவரை பயமுறுத்தியது அவர் நிலைகுலைந்தார்.

அவரால் கேள்விகளுக்கு பதில்கள் கூறயியலவில்லை. பத்திரிகையாளர்களுக்குக்கருத்து தெரிவிக்க கடைசி நாள்வரை காத்திருந்தார். இறுதியாக, கடைசி இரண்டு நாட்கள் அவரைப்பின் தொடர முடிவு செய்து இருந்தபோது. அவர் கலந்து கொள்ளும் பொதுக் கூட்டங்களையும் மற்றநிகழ்ச்சிகளையும் ரத்து செய்து விட்டு, அவர் போக வேண்டுமென்று இருந்த இடத்திற்குப் போக முடிவு செய்து விட்டார். ஆகையால் அவரை நான் பின் தொடர முடியவில்லை. அவருக்கு நடுக்கம் கண்டது.

சீரழித்த நிகழ்ச்சிகள்!

சுமார் 6மணி அளவில் ஆய்வாளர் இக்பால் எங்கள் பாதுகாப்புக்கு நின்றிருந்த இளைஞர்களிடம் மற்றொரு பக்கம் நிற்கும்படி — தகுந்த பாதுகாப்பு அளிப்பதாகமீண்டும் சொன்னுர்,

என்னிடம், எனக்குப் பாதுகாப்பு அளிப்பதாக மீண்டும் சொன்னுர். 5 மணிக்குக்கைது செய்யப்படுகிறேன் 6மணிக்கு காவற்துறை பாதுகாப்புக் கொடுப்பதாகக் கூறுகிருர்.

பெரும்பான்மையான கார்களில் 7 மணி அளவுக்கு காவற்துறையினர் வந்தடைகின்றனர், ஒரு சின்னஞ்சிறு பேருந்தில் பெண் காவற்துறையினர் இருந்தனர், ஒரு 'ஜீப்'பில் நிறைய காவற்துறை

உடனே அவர்களது தடியால் என்னைத் தாக்கினுர்கள். என்னை மற்றொருபுறம் இழுத்துச் சென்றனர். என் தலையில் இரண்டு பலத்தஅடிகள் விழுந்தன. இரண்டாவது அடி விழுந்த போதுதான் என் சுயநினைவை இழக்கச் செய்தது. என்னை எட்டி காலால் உதைத்தார்கள் என்றுகூட நம்புகிறேன்.

மயக்கமுற்ற நிலை ஏற்பட்டமையால் சரியானபடி நினைவு இல்லை

பம்பாயிலிருந்து வந்த இளைஞர்களான அமுல்ராஜ் என்பவரும் மற்றொருவரும், நான் அடிபடும் இடத்தில் வந்து சேர்ந்தனர். ஷியாம் தூமாத்கர் என்பவரை

சிகிச்சை. மற்றவர்களுக்கும் இதுபோன்றே கடை பிடித்தனர்.

உண்மையில் அரசு மருத்துவ மனைகள் ஆச்சரியததிற்குரியவை. இல்லாமலிருந்தாதாலும் இந்த மருத்துவமனையில் நோயாளியை மேற்சொன்ன வகையில் சிகிச்சை அளிக்கப்பட்டது இந்த மருத்துவ மனை ஆச்சரியத்திற்குரிய தொன்ருக இருக்கிறது'

துணை ஆய்வாளர் சிரால் என்பவர் 1 மணிக்கு வந்து என்னை நச்சரிக்க ஆரம்பித்தார். எனதுவாக்குமூலத்தைப் பதிவு செய்துகொள்ளவில்லை. என்னைக் கொடுமைப்படுத்தும் போது ராம்ஜெத் மாலினி என்னைக் கடக்க நேரிட்டது. (ராம் உண்மைலேயே பித்துக்கொள்ளித் தனமான ஒருவர்) சிக்மகளூரில் நாங்கள் அடிபட்டசெய்திகேட்டவுடன் கடுமையான மழையில் இரண்டு மணிநேரம் காரில் பிரயாணம் செய்து வந்நார்.) அவர் சியாலை விரட்டினுர். மேலும் சம்பந்தப்பட்ட காவல் நிலையம் சென்று அதிகாரியிடம்வினுக்கள்தொடுத்து ஒரு பார்வையாளரால் கொடுக்கப்பட்டதாக 'முதல் தகவல் குறிப்புப் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டதாக அறிந்தார்.

ஜார்ஜ் 3 மணிக்கு என்னைக் காண வந்தார். எங்களுக்கு யாதொரு மருத்துவச் சிகிச்சையும் அளிக்கப்படாததைக்

"ஓ. நான் வெறுமனே, தாங்கள் எப்படி இருக்கிறீர்கள் எனக் காண வந்தேன்' என்று கூறினுர். எனக்குக் காயங்கள் ஏற்படுத்தியது அவர்களது காவல்துறையினர், ஆதலால் எனது வழக்குரைஞர் வரும்வரை நான் ஏதும் கூற மறுத்துவிட்டேன் 'இல்லை இல்லை உங்களைக் காணத்தான் வந்தேன்' என்று கூறினுர். உண்மையை விளக்கப் பின்வாங்கினுர்.

எனக்கு ஏன் என்ன ஏற்பட்டது என்ற அதிர்ச்சியல்ல! எப்படி ஏற்பட்டது என்ற அதிர்ச்சி தான்!

இது ஒரு தனிப்படுத்தப்பட்டவிவகாரமல்ல, ஆனல் இது காவற்துறையினரது மிருகத்தன்மையையொட்டி பொது விவகாரம். திருமதி காந்தியின் போதனைகள்டாவும் காவற்துறை அதிகாகளுக்கு இவ்வித மனப்பான்மை பிடிவாதமாக புகுத்தப்பட்டு அவைகளுக்கு ஏற்றவாறு அவர்களும் நிறைவேற்றிய விவகாரமாகும், தேர்தலும்நெருக்கடியும்தான்சிறப்புமிக்கவர்களாக்கியது. ஆனல் இது எந்த நேரமும் நடைபெறுகிறது. இது உண்மையிலேயே ஓயாது வந்து வந்து வருத்தும் பெருந் தொல்லை போன்றது.

உஜ்ரே சம்பவத்தையும், காயத்ரியின் கொலைபற்றிய செய்தியையும் மறுநாள் மாலையில்கேள்விப்பட்டபோது என்

பெருமளவுக்கு பெண் வர்க்கத்தின் வீர முதல்வி என்று கருதப்பட்ட அந்தத் தோற்றத்தை முழுமையாக அழித்தேன் என்பதற்கு உஜ்ரேயில் நடைபெற்ற சம்பவமே உதாரணமும் ருசுவுமாகும். தனது போதனையால், காவற்துறையினர் நடந்து கொண்ட முறையும், ஒரு இளம் பெண் கொல்லப்பட்டிருந்ததும் கவலைப்படாது ஒரு வார்த்தை கூடக்கூருமல் சாகவாசமாக வீற்றிருக்கிருர் என்ருல்,அவர் உண்மையிலேயே ஒரு பெண் அல்ல.

பெண்களுக்கு எதிர்க்க

(8-ம் பக்கம் பார்க்க)

தவணை முறைத் திட்டத்தில் புதிய சகாப்தம் ஏற்படுத்திக்கொண்டிருக்கும் எங்களது சுலபத் தவணை முறைத் திட்டத்தில் நீங்களும் சேர்ந்து பயனடைவீர்

H. O. 41, ரங்கராஜபுரம் ரோடு, சென்னை-24
SHOW ROOM 50, ஏரிக்கரை ரோடு, சென்னை-33
B. O. 104-A ராமகிருஷ்ண மடம்சாலை, சென்னை-28
திறமையுள்ள ஆண் —பெண் கேன்வாசர்கள் தேவை.

நம் நாடு

சந்தா விவரம்

ஓராண்டு சந்தா ரூ. 25.00
ஆறுமாத சந்தா ரூ. 12-50
மூன்றுமாத சந்தா ரூ. 6-25

மூன்று மாதங்களுக்குக் குறைந்த சந்தா ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

தலைகேட்டான் தம்பி

கருணாநிதி

கரும்பெடுத்துத் தமிழ்பிழ் ந்து — மலரில்
சுரும்பெடுத்து வருகின்ற தேன் கலந்து
அரும்பெடுத்துச் சிரிக்கின்ற மகளிர் கூட்டம்
"எறும்பெடுத்துச் செல்கின்ற உணவுகூட
எம்மன்னன் குமணவள்ளல் தந்த" தென்று
எழுச்சிநடை போடுகின்ற கொங்கு நாடு
தமிழ் பாடும் புலவரெல்லாம், குமணன்
புகழ்பாடி வந்திடுவார் —
இமிழ் கடலின் அலைபோலச் சொல்முழங்கும்
கமழ்கின்ற கவிதைமலர்த் தோட்டம் — அன்று
தவழ்கின்ற நெஞ்சத்தின் கூட்டம்
முத்திரைத் தமிழால் கவிதை யாத்திடும் புலவர் — பெருஞ்
சித்திரனார் என்ஒருவர் — பேரறிஞர்!
பத்தரை மாற்றுத் தங்கம்போல பத்தினி —
புத்திரச் செல்வம் — புலவரை யீன்றவயிறு — அவர்
இத்தரையில் கண்ட சுகம் வறுமையே என்று
மெத்த இளைத்திட்டார் — நித்த நித்தம் பட்டினியால்!
பூப்போல வாடி வதங்கிடுவாள் துணைவி:
புழுப்போலச் சுருண்டு படுத்திடுவாள் அன்னை;
பூனைபோல் பாலைஉருட்டிடுவான் பசியாலே பிள்ளை;
கைபிசைந்து நின்றிருந்த கவிஞருக்குக் கொடையாலே
கைசிவந்த குமணவள்ளல் நினைவுவரக் கிளம்பிவிட்டார்.
"பாரிக்கும் காரிக்கும் பின்னர்க்கொடை வழங்க
யாரிருப்பார் எனநினைத்த நினைப்பறுத்து
வாரிக்கொள் நான்வழங்கு கின்ற செல்வத்தை!
மாரிக்குப் பெயர்தான் குமணனென்று மார்தட்டும்
கொங்கு மன்னா
கோரிக்கை யொன்றுமக்கு; என்குடும்பம்
வாழ்வதற்குப் பொன்வேண்டும்"
எனக்கேட்டார்! அள்ளித்தந்தான்! "நான்
வருகின்ற பாதையிலே வாழ்கின்றான் வெளிமான்
என்று — அவன்
தருகின்ற பொருள் வாங்க நடந்துசென்றேன்;
அந்தோ மன்னா!
அவனிறந்து ஆண்டொன்று ஆனதாலே — அவன் தம்பி
இளவெளிமான் இருக்கின்றான் — கொடை வழங்க
மறுக்கின்றான்;
கொடியபதில் உரைக்கின்றான்:
வளங்கொட்டும் முதிரமலை ஆள்கின்ற காவலனே!
தரங்கெட்ட இளவெளிமான் தருக்கடக்க
ஆனையொன்று தரவேண்டும் — அதனை அவன்தன்
காவல் மரத்தில் கட்டிவைத்துக்
கடையனவன் தலைகுனியச் செய்யவேண்டும்;
தருவீர்" என்றார்; தந்துவிட்டான்
வீரவெளி மானுக்கொரு தம்பிஇள வெளிமான்போல்
வேந்தன் குமணனுக்குமுண்டு; இளங்குமணன் அவன்பேர்;
"அணிமணிகள் ஆனைசேனை அரண்மனைகள்
அத்தனையும் அள்ளி அள்ளிக்
கவிமணிகள் வாழ்வதற்கே தந்துவிட்டால் ......
துணிமணியும் இல்லாத ஆண்டிமடம் ஆகிவிடும்
நமதுநாடு —
இனியுமிதை அனுமதிக்க முடியாதண்ணா;
இப்போதே பிரித்திடுஎன் பாகம்" என்றான்.
"கனிகள் உதிர் முதிரமலைத் தருக்கள் கண்டேன் — செங்
காய்கள் உதிர் தம்பியுந்தன் வாயுங் கண்டேன்;
அணிமணிகள் எவை வேண்டும் எனக்கு?
அரண்மனையில் எதுவேண்டும்?
ஆனையென்ன, சேனையென்ன? அனைத்தையுமே
எடுத்துக் கொள்...
அண்ணனுக்குத் தம்பியென்ற அன்பைமட்டும்
கொடுத்துவிடு!" எனச்சொல்லி
அழுதுவிட்டான் குமணவள்ளல் — தம்பி நெஞ்சில்
விழுதுவிட்டு வளர்கின்ற பகைஉணர்வோ அடங்கவில்லை —
பழுதுபட்டுப் போய்விட்ட உள்ளங் கொண்டோன் — 'வானில்
உழுதுவிட்டுப் போன செங்கதிரோன் திரும்புமுன்னே —
என்நாட்டைத்
தொழுதுவிட்டுக் காடேகு" என ஆணையிட்டான்;
குமணன் சென்றுவிட்டான்.
மானினமும் தேன்சிட்டும் மயில்குயில் மாடப்புறாவும்
மனிதஇனம் காட்டுகின்ற அன்பைவிடப் பெரிய அன்பை
மன்னனிடம் காட்டியதால் மகிழ்ந்திருந்தான் — காட்டில்
கன்னல்மொழித் தமிழ்வழங்கப் புலவரில்லை; நீங்கா
இன்னல் அஃதொன்றே — வேறில்லை!
கொழுத்துவிட்ட துரோகத்தின் விளைவாகக்
கவர்ந்துவிட்டான் செங்கோலைத் தன்கையில் — தம்பி!
மகிழ்ந்தானா அந்தமட்டில்? மனத்தில்
கொழுந்துவிட்ட பகையுணர்வைக் கிளறிவிட்டார்
கொடிய நண்பர்
"பொறுத்திருந்தேன் இது நாள்மட்டும் — என்மேல்
போர்தொடுக்க முனைந்துவிட்டான் அண்ணன்.
தடுத்திடாதீர்; தம்பியென்னை; அண்ணன் தலை
அறுத்தெடுத்து வருபவருக்குப் பத்தாயிரம் பொன்பரிசே!"
என்றான்.
"தலையறுப்பதோ? என்ன
குலையறுக்கும்செய்தி இது?
அலையடிக்கும் கடல்வெல்லும் பரந்தஉள்ளம் — தமிழ்க்
கலைவடிக்கும் புலவர்க்கெல்லாம் கொடைநீ ரூற்று!
முதிரமலை கரைந்துவிடும் — முடிமன்னன் தலைகொய்தால் - எம்
உதிரமெலாம் உறைந்துவிடும்" எனச் சொல்லிக்
காரிஉமிழ்ந்தனர் காவலன் காட்டிய பொற்கிழியை!
கோத்திடும் தமிழ்மலர் கொற்றவன் தோளில்
சேர்த்திடும் நினைவுடன் புலவர் வந்தார் —
சாத்தனார் அவர்பெயர் — குமணன்
காட்டினில் இருப்பதை அறிந்து கவன்றார்
பாலையில் சோலையைக் கண்டது போலும்
மாலையில் தென்றலை மணந்தது போலும்
காலையில் கவிஞரைக் கண்டான் குமணன்,
ஓலையில் தமிழை உண்டான் மிகவே.
"அந்தநாள் வந்திலை அருங்கவிப் புலவோய்!
அந்தநாள் வந்துநீ நொந்தெனை அடைந்தாய்
தலைதனைக் கொண்டுபோய்த் தம்பிகைக் கொடுத்து
விலைதனைப் பெற்றுன் வறுமைநோய் களையே!"
என்றான் குமணன்; எடுத்தான் வாளை!
தடுத்தார் புலவர் விடுத்தார் அடவி.
"அடுத்தார் பேச்சால் அழிந்த தம்பி
எங்கே?" என்றார்; தொடுத்தார் கணைகள்
"தம்பியுடையான் படைக்கஞ்சான் என்றிருந்தான் அண்ணன்
நம்பியவன் கழுத்தறுத்தாய், தலையறுத்துத் தருபவர்க்குப்
பொன்பரிசு தருவதாக வாக்களித்தாய்; அவன்
தலையறுத்த வாள் இதுதான்:
தந்திடுவாய் பரிசை" என்றார். அண்ணனின்
வாள்கண்டான்; வாள்முனையில் செங்குருதி தனைக்கண்டான்
விஷஉள்ளம் — வெறிஉள்ளம் — அண்ணன் உயிர்தந்த
செய்தியாலே
வெடிவைத்த மலைப்பாலச் சிதறிற்று;
வெள்ளையுள்ளம் தம்பியுள்ளம் வாய்விட்டுக் கதறிற்று.
"ஆவிதர நேரிடினும் அருந்தமிழ்க்கே தருவேனென்று
காவியுடைக் குமணனவன் கானகத்தில் உரைத்திட்ட
பொன்மொழியை
பாவிநீ புரிந்திட்ட பாதகத்தால் யான்கற்றேன்
தாவிநீ ஓடிச்சென்று அன்னவனின் தாள்பணிந்தால்
தமையன் உயிரல்ல; தமிழுக்கே உயிர்வந்துவிடும்.
தயங்காமல் வந்துவிடு; தடவிப்பார் வாள்முனையை.
இரத்தமல்ல; செவ்வண்ணம்" என்றுரைத்தார்.
ஏன் நிற்பான் இளங்குமணன்?
தேன் விற்பார் தமைச்சுற்றும் ஈக்கள்போல்
வான்தமிழால் கவிதைபின்னும் புலவர் கூட்டம்
வட்டமிடும் குமணமன்னன் காலடியில்
வணங்கி வீழ்ந்தான் — வள்ளல் தழுவிக்கொண்டான்.
தமிழ்ச் சாத்தனார்க்குத் தலையைக் கொடையாய்த் தரச்
சம்மதித்தோன்
தம்பிக்கும் ஒரு மன்னிப்பைக் கொடையாய்த் தந்தான்.
தம்பி குடையைத் தந்தான்;
தனக்கினி வேண்டாமென்று; அதனை அண்ணன்
தமிழுக் கீந்தான்!

அம்பேத்கார் நினைவு நாளில்....



உடன் பிறப்பே,

1891 – ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 14 – ஆம்நாள் பிறந்து, 1956 – ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் ஆறும் நாள் அதிகாலையில் மறைந்து விட்ட தாழ்த்தப்பட்ட மக்களின் நம்பிக்கையொளியான டாக்டர் அம்பேத்கார் அவர்களின் நினைவுநாள் இன்று!(6 12.78)

இந்திய அரசியல் சட்டம் என்ற வார்த்தை உச்சரிக்கப்படும் பொழுதே நெஞ்சில் அம்பேத்காரின் நினைவு தான் இன்றைக்கும் நிழலாடும்.

அவர் முன்னின்று பொறுப்பேற்றுத் தயாரித்த அந்தச்சட்டம் அவர் எதிர்பார்த்தவாறு செயல்படுத்தப்படவில்லையென்பதை வெளிப்படையாகக் கூறிய வீர உள்ளம் படைத்தவராகவும் அவர் திகழ்ந்தார்.

அவர் பிறந்தபோது, அவர் பிறந்த சமுதாயமான தாழ்த்தப்பட்ட சமுதாயம் விலங்கினும் இழிவானதாக மதிக்கப்பட்டது. அவருக்கே அவர் படித்த பள்ளியில் தண்ணீர் அருந்த உரிமையில்லை பள்ளி ஆசிரியர்களும் மாணவர்களும் அவரை வெறுத்தனர்.

அவா தாழ்ந்த சாதிக்காரர் என வெறுத்துக்கூறி அவருக்குத் தலைமுடி வெட்டவும் மறுத்துவிட்டார் முடி திருத்தும் தொழிலாளி!

பள்ளி ஆசிரியர் ஒருமுறை அம்பேத்காரை அழைத்து கரும்பலகையில் ஒரு கணக்கைப் போட்டுக் காட்டும்படி உத்தரவிட்டார் உடனே உயர் சாதிக்கார மாணவர்கள் அனைவரும் விரைந்தோடிச் சென்று கரும்பலகைக்கு அருகிலிருந்த தங்களுடைய சிற்றுண்டிப் பாத்திரங்களை எடுத்துக்கொண்டு தங்கள் இருக்கைக்கு ஓடிவிட்டனர். இல்லையேல் அந்தத் தாழ்த்தப்பட்ட இளைஞரின் நிழல் பட்டுச்சிற்றுண்டிப் பாத்திரங்கள் தீட்டாகிவிடுமாம்.

ஒருமுறை அம்பேத்காரும் அவரது சகோதரரும் மாணவப் பருவத்தில் வண்டியிலேறிச் சென்றபோது, வண்டிக்காரர்; அவர்கள் இருவரும் தாழ்த்தப்பட்டவர்கள் என அறிந்தவுடன் வண்டியைக் குடைசாய்த்து இருவரையும் பூமியில் புழுதியில் தள்ளிவிட்டார் இத்தனைக் கொடுமைகளுக்குமிடையே "அம்பேத்கார்" என்றஒரு பார்ப்பன குலத்து ஆசிரியர் மாணவன் அம்பேத்காரிடம் மிகுந்த அன்பும் பாசமும் காட்டி அவரை ஊக்கப்படுத்தினர்.

"பீமராவ் இராம்ஜி அம்பாவதே கார்" என்பது தான் அவரது பெற்றோர் இட்ட பெயர். தன்னிடம்அன்பு காட்டிய பார்ப்பன ஆசிரியரின் நினைவாக அந்த ஆசிரியரின் பெயரான அம்பேத்கார் என்பதை இணைத்து', பீமராவ் இராம்ஜி அம்பேத்கார்" என்று தன் பெயரை மாற்றிக் கொண்டார்.

உடன்பிறப்பே, "குங்குமம்" வார இதழில் நான் எழுதும் 'ஒரே இரத்தம்" என்ற தொடர் கதையில் மேலே குறிப்பிட்ட அம்பேத்காரின் வாழ்க்கை நிகழ்ச்சிகள் சிலவற்றைக் கோடிட்டுக் காட்டியிருக்கிறேன் என்பதை இந்தக் கடிதத்தைப் படிக்கும்போது நீ புரிந்து கொள்வாய் என்று நம்புகிறேன்.

புத்தரென்ன; மகாவீரர் என்ன; வள்ளுவரென்ன எத்தனையோ சான்றோர்களின் சமத்துவ முழக்கம் ஒலித்த போதிலும் "வர்ணாஸ்ரம தர்மம்" என்னும்கோரப்பிடியில் சமுதாயம் சிக்கிச் சீரழிந்தது மட்டுமல்ல: மனிதனையே மனிதன் வெறுக்கும் கேவலமான கொடுமை அம்பேத்கார் பிறந்தபோதும் மாறவில்லை அவர் ஏந்திய புரட்சிக் கொடிக்குப் பிறகும் — காந்தியடிகள் ஆற்றிய அருந்தொண்டுக்குப் பிறகும் — பெரியார், அண்ணா ஆகியோர் எழுப்பிய பகுத்தறிவுப் போர் முரசுகளுக்குப் பிறகும் அறவே மாறிவிட்டதாக மகிழ்ச்சியடையும்நிலையிலும் நாம் இல்லை.

மேலெழுந்தவாரியாகப் புனுகுப் பூச்சின் மணம் வீசுகிறதே தவிர, அந்தப் புனுகு மறைத்துக் கொண்டிருக்கும் ஆழமான புண், இன்னமும் கிராமப் பகுதிகளில், ஏன்; ஒரு சில நகர்ப் பகுதிகளில் விழுப்புண்களாக அல்ல; "விழுப்புரப் புண்களாக'க் காட்சி தரும் அவலநிலை இருந்திடத்தான் செய்கிறது.

எனவே இந்தியாவைப் பொறுத்தவரையில் அம்பேத்காரும் — தென் எகத்தைப் பொறுத்தவரையில் பெரியாரும், அண்ணாவும் — தூக்கிப் பிடித்த சமதர்ம — சமத்துவக் கொடி; தொடர்ந்து வீறு கொண்டு பறந்திட பகுத்தறிவுப் பட்டாளத்தின் பயணம் தொய்வு படாது நடந்திட வேண்டும்.

மனம் நொந்து போன நிலையில் அம்பேத்கார் ஒரு

முறை – 1935 – ஆம் ஆண்டு ஈலா என்னுமிடத்தில் நடைபெற்ற தாழ்த்தப்பட்டோர்மாநாட்டிலும் அடுத்து புனாவில் நடைபெற்ற தாழ்த்தப்பட்ட இளைஞர்கள் மாநாட்டிலும்

"இந்து மதத்தில் இருக்கும்வரை நமக்குச் சமத்துவம் கிடைக்காது. ஆதலால் எந்த மதம் உங்களுக்குச் சமத்துவம் அளிக்க முன் வருகிறதோ அந்த மதத்தில் நீங்கள் சேர்ந்து கொள்ளலாம்."

என்று உரை நிகழ்த்தினர்!

இந்துமதக் கொடுமையில் அவர் நெஞ்சம் எப்படித்

கலைஞர் கடிதம்

தணலாக மாறிவிட்டது என்பதற்கு அவரதுஅந்தமாநாட்டுப் பேச்சுக்கள் எடுத்துக் காட்டுக்களாகும்.

அவரது நினைவு நாளான இன்று — சாதிமதக் கொடுமைகள் தகர்க்கப்படவும், சாதிப் பூசல்களும், கலவரங்களும் தவிர்க்கப்படவும் — ஒவ்வொருவரும்உளத் தூய்மையோடு உழைத்து; சமத்துவத்தை எங்கணும் நிலை நிறுத்தப் பாடுபடுவோம் என்ற உறுதியினை மேற்கொள்வோமாக! வாழ்க டாக்டர் அம்பேத்காரின் புகழ்!

அன்புள்ள,

மு. க.

தலைவர் கலைஞர் வேண்டுகோளுக்கிணங்க

புயல் - வெள்ளத் துயர் துடைப்பு நிதி

(அனுப்பியோர் பட்டியல்)

(26-11-78 இதழ் தொடர்ச்சி— 89456. 85)

நெல்லை வி முருகு, இட்டந்தாங்கல் ஏ. கன்னியப்ப மூர்த்தி, நாகனேரி கே. சூரியப்பிரகாசம்; என். சீனிவாசன், சிவகாசி க. தனசேகரன்—பாண்டியன், புதுகை எஸ். கமால் முகைதீன். திருச்சி அரு ஆதிமூலம். விருத்தாசலம் க. இராமலிங்கம், கிழக்குருவாடி சு. செயபாலன் ஆகிய 9 பேர் ரூ. 11—வீதம் 99 00

சேலம் ஜி பி. இராசன், ஆர்: தேவகி அன்தாயி அம்மாள் தஞ்சை க. சம்பந்தம் ஊந்துக்குளி எம், சுப்பிரமணி எஸ்.எம் அய்யாத்துரை, மதுரை என். வெள்ளையப்பன், எஸ்.தட்சிணாமூர்த்தி, எம், கிருஷ்ணன், எஸ். டி. ராஜாமுத்தையா, சேலம்—1 எஸ். ஏ. இராமலிங்கம் எஸ். ஏ. சண்முகம் எஸ். மதியழகன், குரும்பர் தெரு ஏ. இராசமாணிக்கம், இடைப்படி எம். வீராயியம்மாள், காரமடை சுல்தான்பாய், வாசு ஸ்டுடியோஎஸ்.முத்துச்சாமி, சென்னை எல். கே. வரதராசன். இராயப்பேட்டை கே. சுப்பிரமணியன், ஆப்பூர் ஏ. கிருஷ்ணன், பொம்மிடி பி. ஆர். மாரிமுத்து முதலியார், குடியாத்தம் கே சுப்பிரமணியம், வேலூர் ஆர், வாசு, மதுரை கே. ஏ. இரசாக் ஆகிய 24 பேர் ரூ. 10 — வீதம் 240 00

கூக்கல்துறை பி. அப்துல் அமீது, நீலகிரி ஏ. பாருக், கோத்தகிரி நாராயணன், வி. குஞ்சப்பு, சிங்கம்பாறை ஏ. வியாகப்பன், கொசப்பேட்டை கோ. கிருட்டினன், வ ஆ. பி. ஏ. சலாம் சாகிப், வேலூர்—1 க, சபாராசலு, சென்னை – 28 சு.காளியப்பன், மந்தவெளி கன்னியப்பன், சி. பரமானந்தம், இராசா அண்ணாமலைபுரம் சி. பிச்சை, பாலசுந்தரம், சைதை நரசிம்மன், சிந்தாதிரிப்பேட்டை கே. எஸ். மகபூப், இராசா அண்ணாமலைபுரம் சி. என், பாண்டியன், இந்திரா நகர், இராமசாமி மந்தவெளி வி. தனசேகரன், மு. இராசு, இராயப்பேட்டை ஜே காஜா கஜிமுதின், திருவல்லிக்கேணி ஏ. சண்முகம், இராயப்பேட்டை ஆர், ஏகாம்பரம். இரசா அண்ணாமலைபுரம் பி ரூபன், மயிலை டி. வீரப்பன், ஆர், கே நகர் கே. பழனிச்சாமி, புது வண்ணை எஸ். கணேசன். வி. கணேசன், சென்டி னெரி ரோடு எல். சிதம்பரம், இராயபுரம் ஆர். பழனி, தண்டையார்பேட்டை டி. இராமசாமி, இ. செல்வராஜ். பி, அழகர்சாமி சத்தியமூர்த்தி நகர் எல். கோபாலன். புதுவண்ணை எஸ். இசக்கிமுத்து, எம். சந்தானம், திண்டுக்கல் எ. வி. வி. அண்ணாமலை, வெங்கிட்டாபட்டி ச. இராசு, போடி ஆர். பாண்டிதுரை, தஞ்சை எம். எம். கென்னடி, கோவை எ. பத்ருசமான், தாசப்பகவுண்டன் புதூர் என்; எஸ். நடராஜ், நாட்ராயன் என். எஸ். நஞ்சப்பன், தூத்துக்குடி—2 கலைச்செல்வன், தஞ்சை ஆ. நடராசன், காரைக்கால் கா மு. காதர்பாட்சா நெடும்பலம் பி கோபால கிருட்டிணன். திருநகர் பெ, ஆண்டி தேவர், மதுரை – 9 ஆர். என். வீராசாமி, எம். நவநீத கிருட்டினன் ஆகிய 50 பேர் ரூ. 10—வீதம் 300 00

ஈரோடு மதுரை மீனாட்சி டெக்ஸ்டைல்ஸ் ஆர். புஷ்பா ஆர். அமுதா. ஆர். இராசாமணி, ஆர். பாஸ்கரன் திருச்சி மகாராணி சைக்கிள்கடை முகமது கவுஸ், நரிப்பள்ளி தா. மு, வே. இரமணன். சென்னை-24 ஏ. பாண்டுரங்கன், சென்னை 68 எஸ் அன்பரசு. இராமநாதபுரம் கே. மாரியப்பன், சென்னை 12 வே. கதிர்வேலு, பெரம்பூர் பேரக்ஸ் இ. ராஜு, கீழ்ப்பாக்கம், கு. அண்ணாமலை, ஆவடி பி. என். பக்தவத்சலம், சேகர்நகர் எம். கோபால், ஈரோடு-6 செங்குந்தபுரம் என். பெத்தாரண்ணன் எ அக்காயம்மாள், பி. அருணாசல முதலியார், எஸ ஜானகி என், இராமாயி, பி. ஏகாதமணி, கே. இரங்கசாமி, பி. சுரேஷ். பி கந்தசாமி, ஆகிய 23 பேர் ரூ. 10 – வீதம் 230 00

ஈரோடு—6 — ஏ. நாச்சிமுத்து, ஏ. சண்முகம் எஸ், சின்னச்சாமி. எ பொன்னுசாமி, என். கன்னியப்பன், பி. நாகரத்தினம், எஸ ரமேஷ், வி, இராமன், கோபிச்செட்டிப்பாளையம் கே. என். பழனிச்சாமி கோவை வி. எஸ, சுந்தரம், சிங்காநல்லூர் எஸ. கே. லிங்கப்பன். நீலகிரி ஒட்டுப்பட்டறை எம். ஜ. பிள்ளை, கூக்கல்துறை எஸ. பீமா கவுடர், கோத்தகிரி வி. கொங்கன், எக்கல் எம். பிச்சையன், கொத்தமங்கலம் மு. இராமாயியம்மாள், இராசேந்திரம் எம். வைரப்பெருமாள். சத்தியமங்கலம் எட்டுகுடி ஆர். முருகையன். கோவை 6 டி எஸ. சிவராஜ், பி, பி. தெரு. ஜி. கிருட்டிண பிள்ளை, சேலம் டி டி. வையாபுரி முதலியார் & சன்ஸ், சிச்சிப்பாளையம் வி, பி. சிவம், செவ்வாய்ப்பேட்டை ஜி. மகாதேவன், சென்னை 28 எஸ். வேலாயுதம், திருவான்மியூர் வி. கோபால், செங்குன்றம் ந! நடரரசன, அடையாறு கே. தட்சிணாமூர்த்தி ஆகிய 27 பேர் ரூ. 10—வீதம் 270 00

நாகை அ. சோமசுந்தரம், மஞ்சக்கொல்லை எம்; சுப்பிரமணியன், கரூர் – 2 ஆர்: சசிப்பிரியா, கே, எஸ, இராமசாமி, ஈரோடு சையத் இராப், திண்டுக்கல் ரோடு கே காளிமுத்து, வெரியம்பூர் கே. முத்துச்சாமி மதுரை, ஆத்தூர் எம். சாமிக்கண்ணு தாராபுரம் ஏ நாராயணசாமி, கூக்கல் துறை கே. எச், நஞ்சப்பன், குன்னி அட்டி கே இரியன் கூக்கல் துறை குட்டியப்பன். கம்பட்டிக் கம்பை ஆர். மகாலிங்கம், சென்னை—31 சேத்துப்பட்டு-சே.குப்புசாமி. திருவில்லிபுத்தூர் கு. சுப்பிரமணியம். உத்தமபாளையம் மு ஆண்டவர், மு நடராசன், கம்பம் எம். அமாநுல்லாகான், சொக்கலிங்க நகர் இராசாராம், கோட்டூர் சித்தார்த்தன், பருக்கல் ம. ப சுந்தரேசன். உடுமலை காந்தி சதுக்கம் கே: குத்புதீன், கோவை—15 மரிய ஆரோக்கியம். சோமனூர் சோ வி பழனிச்சாமி, திருப்பூர்...4 கிளை சார்பாக, சென்னை 39 என். கே: சாமி. புரசை த. மோகன்ராசு குயப்பேட்டை கே குலசேகரன், எல் சீத்தாபதி ஏ இராசேந்திரன். கொசப்பேட்டை கே தியாகராசன். போடி மாவீரன், காரைக்கால் இரா செல்வராசன். திருப்பூர்—1 சி. தருமலிங்கம், இரா மாணிக்கம், அரிமழம் ம தமிழிரும் பொறை. கோவை மாதம்பட்டி எம் ஜி இராமலிங்கம். எஸ ஏ சித்திக், கே வி வேலாயுதம் கணேசபுரம் ஏ என் சேக்சான் மி சின்னசாமி. சிவன்மலை பெரியசாமி காலேஜ் புதூர் எம் முத்துகுமார்; கோவை 30 பி சம்புலிங்கம். நாகதேவம்பாளையம் பி கே பழனியப்பன், ஆனைப்பட்டி பெ இராமு, எடையூர் ஜி இராமகிருட்டிணன். ஈரோடு – 2 எ வி மோகன் அரக்கோணம் எ துரை. தாராபுரம் ஆர் திருமூர்த்தி ஆகிய 50 பேர் ரூ 10 வீதம் 500 00

சென்னை—57 ஆர் பாலகிருஷ்ணன் கோட்டூர்புரம் கே டி இளங்கோ இந்திரா நகர் வசந்தராவ் பாரதிபுரம் எம் சண்முகம், இந்திராநகர் கே வரதன், என் ஜி ஜி ஓ நகர் எம் ஞானசம்பந்தன் மயிலை வி வேலாயுதம், திருவான்மியூர் எம் பாலகிருட்டிணன், கும்பகோணம் வை நாராயணன். எ கே சாமிநகர் ஒ ஆர் முருகேசன் கோத்தகிரி ஆர் இர்யா கவுடர், சி இராதாகிருட்டிணன் எஸ இராசன். எம் சரியா, கே மடியன், கே ஜோகாளி ஜி அப்பு மேஸதிரி, பி ஜோதி ஜே பெள்ளன், ஜே விஜயகுமார். ஈரோடு செங்குந்தபுரம் எஸ கவுண்டியப்பன் கே குமராயி ஆகிய 22 பேர் ரூ 10 – வீதம் 220 00

கோவை. அந்தியூர் கே கே ஆராமசாமி, நீலகிரி கே அருள்தாஸ். கருவம்பாளையம் கே சண்முகம். கோவை ஆர் மதியழகன் கடத்தூர் ஆர் கந்தசாமி, சிவிலார்பாளையம் சி பி பெரியசாமி.எருமாபாளையம் சி ஆறுமுகம், கோவை - 22 ஆர் ஆறுமுக கவுண்டர் கே எம் ஆறுமுகம், வீரசெல்லக்கண்ணு. கோவை எ இராஜாமணி. சூரியநல்லி, கு ராபர்ட் பொள்ளாச்சி டி எம் எஸ மணி. நீலகிரி ம சோமசுந்தரம். மீஞ்சூர் பெரியசாமி, புதுக்கோட்டை பெ காசியா பிள்ளை. அடையாறு நாகராசன். திருவான்மியூர் எ பரமசிவம், இந்திரா நகர் பி இராசமாணிக்கம். ஒரத்தநாடு இரா சின்னதுரை, கோத்தகிரி ஏ. செல்வன் ஓமலூர் அ. முத்து. கண்ணங்குறிச்சி சி பச்சியப்பன், சேலம் ரூப்புரங்கம், ஆர். வீரச்செட்டி. மதுரை என் திருமலை ராசு, ஆ. ஸ்டீபன், நெல்லை, ச. நடராசன், ஆகிய 28 பேர் ரூ. 10 —வீதம் 280 00

அந்தியூர் முகிலன், திருவொற்றியூர் ஆ. தங்கராசு. இடையன்குடி இராயர், தென்கரை எஸ். துளசிராம், குமரிபழனிச்சாமி, சுருளியாறுசி. அருளப்பன் உறையூர் எஸ். எம். சம்சுதீன். எஸ; எம். முபாரிக் அலி. திருச்சி 8 ஏ. பி, குழந்தைவேலு. முகவை கே. உடையான். ஆகிய 10 பேர் ரூ. 10 —வீதம் 100 00

பூந்தமல்லி ஜி சார்லஸ். அயன்புரம் ஆர். பலராமன், சென்னை 12 சி. கணேசன் ஆகிய 3 பேர் ரூ; 9 —வீதம் 27 00

இந்திரா நகர் முகமது யூசுப். கிண்டி சி, அரிகிருட்டிணன். திருவான்மியூர் எம். முகலீஸ்வரன்; பி. துரை அடையாறு எம். நரசிம்மன், கோட்டூர் கே. வரதன், நாவலூர் சொக்கலிங்கம், திருவான்மியூர் கே. இராசு, கோட்டூர் வி. அனந்தபாபு. அடையாறு பி டி, சி. தொழிலாளர் ஊழியர் முன்னேற்ற சங்கம், திருவான்மியூர் டி, கிருட்டிணன் ஆகிய 11 பேர் ரூ. 8 – வீதம் 88 00

(தொடர்ச்சி 9-ம் பக்கம்)

சிக்மகளூரில் ஜனநாயகத்தைச் சீரழித்த நிகழ்ச்சிகள்

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

அதிக தைரியம் ஊட்டியுள்ளார் என நினைக்கிறேன். நான் எங்கு சென்றாலும், தனியாகவே சென்றேன், ஆனால் பெரும்பான்மையான தாய்மார்கள் தைரியத்தை வரவழைத்து என்னுடன் கலந்துக் கொண்டனர். அவர்களது செய்கை முதல்படியாக இருப்பினும் தொடர்ந்து பிரச்சினைகளுக்காக போராட இனி முதன்மையில் நின்று எதிர்ப்புகளை தெரிவிப்பார்கள் என நினைக்கிறேன்

முன்னமேயே சொன்னது போல் நான் எக் கட்சியையும் சார்ந்தவளல்ல, சார்ந்தவளாக இருக்கப்போவதுமில்லை. ஆனால் காரண விளக்கங்களுக்காக முன் நிற்க முழு நம்பிக்கையுடன் என்றும் இருப்பேன், காயத்ரி பிரச்சினையை யொட்டி உஜ்ரேயில் உடனடியாக காரண விளக்கங்களுக்காக போராட எண்ணி முதலாவதாக அச்சம்பவத்தில் ஈடுபட்ட அத்தனை காவல் துறையினரையும் தற்காலிக வேலை நீக்கம். செய்து நீதி விசாரணை நடத்தக் கோருகிறேன். காவற்துறையினரின் சட்டத்தொகுப்பேடு, அவர்களது நன்னடத்தை காவற்துறை படையினரது போர்க் கருவியை அகற்றிடல் போன்றவை யொட்டி உரையாடல் நடத்திட எண்ணுகிறேன்,

நான் சினிமாப் படப்பிடிப்பு தொழிலிலும் தொழிற் சங்கங்களிலும் ஈடுபாடு கொண்டுள்ளேன். விமானதள ஊழியர்கள், சுரங்கத் தொழிலாளர்கள் சம்பந்தப்பட்ட தொழிற் சங்கங்களில் பங்கு கொண்டு வருகிறேன். புற சீரமைப்புப் பணிகளுக்காகத்தனி மாடம் வைத்துள்ளேன். அது விளக்கம் தரும் மாடமாகவும், பத்திர மேற்கோளாட்சி மாடமாகவும் பயனடைகிறது:

காரண விளக்கங்களுக்காகவும், பிரச்சினைகளுக்காகவும போராடுவதில் அடிப்படையான நம்பிக்கை கொண்டுள்ளேன் எனக்கென ஒரு கொள்கையுண்டு, நான் சமதர்மவாதி குழந்தைப் பருவத்திலிருந்தே டாக்டர் லோகியவால் தொடர்புடையவளாக்கப்பட்டேன், அவர் எனது குடும்பத்தின் நெருங்கிய நண்பர் எனக்கு ஜனதா கட்சிக்கும் தொடர்பு யாதும் இல்லையெனினும் அதில் உள்ள ஒரு சிலரை வெகுவாக மதிக்கிறேன். ஜார்ஜ், மதுலிமாயி தண்டவாதே போன்றவர்களையும் பெங்களூரில் வெங்கட்ராம் போன்றவர்களையும் பெரிதும் மதிக்கிறேன். ஆனால் அதன் செயல் திட்டங்கள் பெரும் தோல்விதான் கண்டுள்ளன. அதற்கு வாக்களித்தவர்களைத்தோல்வியடையச் செய்துள்ளது. அதன் செயல்களில் வலிவுடையதாக எதையுமே காண முடியவில்லை.

இப்படிப்பட்ட வகையில் திருமதி காந்தி மிகவும் தெளிவுடையவராக இருந்தார். அவரது அரசியல் முழுதும் பொறுப்பற்றவைகளாகவும், கருத்தற்றவைகளாகவும் இருந்தாலும், அதன் அடிப்படை வியப்புத் தன்மை கொண்டதாகவும் இயல்புணர்வுடனும் இருந்தன.

முதல்வருக்குப் புரியாதது!

நீங்கள் இந்திரா அவர்களை ஆதரிப்பது ஏன்? முன்னாள் பிரதமரைப் பற்றி இன்னாள் தமிழக முதல்வரிடம் கேட்ட கேள்வி இது!

கேள்விக்கணை தொடுத்தவர்கள் எதிர்பார்த்தது— வங்கிகள் தேசியமயமாக்கப்பட்டது மன்னர் மானியம் ஒழிக்கப்பட்டது போன்ற பல்வேறு செய்திகளை வாரிவழங்குவார் என்பதற்காகத்தான்.

ஆனால் பதில் வழங்குபவர் என்ன சாமானியமானவரா? —எவ்வளவு பழுத்த தியாகி! பழம்பெரும் அரசியல்வாதி!! அவரது வாழ்க்கை அனுபவங்களை வடித்தெடுத்தால் அது தானே துணைக்கண்ட வரலாறு! எனவே வினாவிற்கு உடனே நாகரிகமான (!) பதில் வெளிவந்தது — என்ன தெரியுமா?

"தி. மு. கழகத்தின் ஊழல் ஆட்சியை அம்மையார்தைரியமாகத் தூக்கியெறிந்தார்" என்கிற பாராட்டுரைதான். எதிர்க்கட்சித் தலைவரை வெளிநாட்டில் கூட விட்டுவைக்கவில்லை. சரியாகச் சாடிவிட்டோம் என்கிற நினைப்பு அவருக்கு! ஆனால் அமெரிக்காவில் வாழும் தமிழர்களும் ஏனைய பெருமக்களும்அவரைப்போல அரசியல் அரிச்சுவடி அறியாதவர்கள் அல்லவே! எனவே எதிர்பார்க்கக்கூடாத இடத்தில் எதையோ எதிர்பார்த்து விட்டோம் எனவாளாவிருந்து விட்டனர். ஆனால் எம். ஜி. ஆருடைய தப்புக்கணக்கு இன்னும் தமிழக மக்கள் "கோயபெல்ஸ்" செய்திகளை நம்புகின்றார்கள் என்றநினைப்பு

இந்த ஓராண்டுக் காலத்தில் நமது முதல்வரின் சொல்லுக்கும் செயலுக்கும் இடையேயுள்ள வேறுபாட்டினையும் மக்கள் புரிந்து கொண்டு உரிமைக்காகப் போராடத்துவங்கிவிட்டனர், இந்த உண்மைநிலையை மறைக்கத்தான் தமிழ் மக்களின் எந்தப் போராட்டமாக இருந்தாலும் அதைக் கலைஞர்தான் தூண்டிவிட்டார் என்ற அபாண்டமான குற்றச்சாட்டு.

மாணவர்கள், பேராசிரியர்கள், மருத்துவர்கள். பொறியியல் வல்லுநர்கள், பேருந்து ஊழியர்கள், விவசாயிகள், தொழிலாளர்கள் மற்றும் அரசு ஊழியர்கள் ஆகிய அனைவரும் போராடுகிறார்கள் என்றால் தமிழ்ச் சமுதாயம் விழிப்புணர்ச்சி பெற்றுவிட்டது என்று பொருள். ஒருவரைபல நாள் ஏமாற்றலாம், பலரை சிலநாள் ஏமாற்றலாம். எல்லோரையும் எல்லா நாட்களும் ஏமாற்ற முடியாது. இது இயற்கை விதி. தமிழ்ச் சமுதாயம் இந்த உண்மைநிலையை நெருங்க நெருங்க தமிழ்ப் பெருங்குடி மக்களின் முடிசூடா மன்னரான கலைஞரை விட்டு அது எங்கே செல்ல முடியும்.

அனைத்து மக்களின்வெறுப்புக்கும் ஆளான தமிழகஅரசை இராஜினாமா செய்யும்படிக் கழகம் கோரவில்லை அப்படி நாம்கோராததற்குக்காரணம் இவர்கள் மீது உள்ள நம்பிக்கையால் அல்ல; சனநாயகத்தின் மீது உள்ள பாசத்தால்!

ஆனால் கலைஞரின் மீது காழ்ப்புணர்ச்சி கொண்டோர் —சனநாயக மக்களுக்கு எதிராக — வெளிநாட்டில்கூட உண்மையை மறைக்கும் முயற்சிகளில் ஈடுபடுகின்றனர்

கலைஞர் அரசைக்கவிழ்ப்பதற்குச் சில மணி நேரத்திற்கு முன்பு 'இதுஒருகாந்திய அரசு' என்று ஆளுநர்கூறியது இன்னும் நமது காதுகளில் ஒலித்துக்கொண்டிருக்கிறது. ஆனால் அப்படிக் கூறியதற்கு இரண்டு நாட்களுக்கு முன்பே கழக அரசின் மீது குற்றம் சாட்டிக் குடியரசுத்தலைவர் ஆட்சியைப் பிரகடனப்படுத்தக்கோரி அவர் டெல்லிக்குக் கடிதம் எழுதியதாக அரசியல் செய்தி! இப்படிப் பாராட்டிப் பேசியவர் அப்படி எழுதியிருக்கமாட்டார் என்று நாம் மறுக்கக் கூடிய வாய்ப்பைக் கூட அந்த "நெருக்கடி கால சனநாயகம்" நமக்கு வழங்கவில்லை. ஆனால் கழகத்தின் இந்தக் கருத்து தமிழக மக்களிடம் பரவலாகப் பேசப்பட்டது.

விடுதலை விரும்பி பி. ஏ.

அண்மையில் குல்திப் நய்யார் தீட்டிய 'ஜட்ஜ்மெண்ட்' என்கிற ஆங்கில ஏட்டில், 'முத்துவேல் கருணாநிதி' அரசாங்கம் நெருக்கடி நிலை காலத்தில் கவிழ்க்கப்பட்டது. இந்திய அரசின் உள்துறை அமைச்சகத்தில் தயாரிக்கப்பட்ட தஸ்தாவேஜில் அன்று கவர்னராக இருந்த கே. கே. ஷா கடமையுணர்வுடன் கையொப்பம் இட்டார்" என்று குறிக்கப்பட்டுள்ளது.

மேற்படி செய்தியை இதுவரை இந்திய மைய அரசு மறுக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இப்போதாவது உண்மை நிலைகளை மக்கள் புரிந்து கொள்ளக்கூடும். கவர்னர் ஷா அனுப்பியதாகச் சொல்லப்பட்ட கடிதத்தில் உள்ள முக்கியமான குற்றச்சாட்டுகள்—

1. நெருக்கடி காலத்தில் மத்திய அரசுக்கு ஒத்துழைப்பு (?) வழங்கவில்லை.

2. தடை செய்யப்பட்ட அமைப்புகள் மற்றும் சில ஏடுகள்,முறையேஇயங்குவதையும் வெளிவருவதையும் தடுக்க முழு முயற்சியில்ஈடுபடவில்லை

மாநில சுயாட்சி அடைய வன்முறையைத் தூண்டுதல்.

ஆனால் உண்மைநிலை வேறானது

காமராசர் போன்றபெருந்தலைவர்களைக் கைது செய்யக் கழகம் விரும்பவில்லை என்பது மட்டுமல்ல; அப்படியொரு தாக்கீது வந்தால் அமைச்சரவையே இராஜினாமா செய்தாலும் செய்யுமே தவிரஅப்படிப்பட்ட புடம்போட்ட தங்கங்களைக் காராக்கிரகத்தில் அடைத்துக் கழகம் ஆட்சி நடத்த விரும்பவில்லை என்ற அறிவிப்பு அவர்களுக்கு 'ஒத்துழைப்பு' என்ற பொருளில் அடங்கவில்லை.

நாம் என்ன செய்ய?

உண்மையான தணிக்கை முறை என்பது பொய்யான வதந்திகளைத் தடை செய்வது; மாற்றுக் கருத்துக்களை அழிப்பதல்ல.

வன்முறை கழகத்திற்கு உடன்பாடான ஒன்றல்ல. என்றைக்கும் வன்முறையை எதிர்ப்பவர்கள் நாம். எனவே இவை அனைத்தும்கழக அரசைக் கவிழ்க்கவேண்டும் என்ற உள்நோக்கோடு நடைபெற்ற அரசியல் கரவாட்டமே தவிர வேறல்ல என்பதை நாடு அறியும்,

இப்பொழுது திரும்பக் கேட்கிறோம். பஞ்சாப்முதல்வராக இருந்த பிரதாப் சிங் கெய்ரான் மீது தாஸ் கமிஷன் விசாரணை நடைபெற்ற பொழுது அந்த அரசை அன்றைய பஞ்சாப்கவர்னர்கலைக்கவில்லையே ஏன்?

உத்தரப்பிரதேசத்தில் — சட்டம் ஒழுங்கு நல்லமுறையில் காப்பாற்ற மத்திய அரசால்தான் முடியும் என்ற நிலை ஏற்பட்டு — காவலர்களேஅரசுக்கு எதிராகக் கிளர்ந்தெழுகின்ற அளவிற்குபயங்கரமான போராட்டம் நடந்தபொழுது அரசு எந்திரம் இயங்க இயலாத நிலையில் கவர்னருக்குக் 'கொஞ்ச காலத்துக்கு தற்காலிகமாகக் குடியரசுத் தலைவரிடம் மாநில நிர்வாகம் இருக்கட்டும்' என்று அன்றைய முதல்வர் கமலாபாதி கடிதம் எழுதும் சூழ்நிலை வந்தும்கூட உத்தரப்பிரதேசத்தில் அன்று கவர்னராக இருந்த அக்பர் அலிகான்சட்டம் ஒழுங்கு கெட்டுவிட்டதாக தானாக எழுதி முன்வரவில்லை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

உத்தரப்பிரதேச முதல்வர் ஆலோசனைப்படி சில திங்கள் குடியரசுத் தலைவரின் கீழ் கவர்னர் ஆட்சி செலுத்தினார் 'மீண்டும்சட்டசபைகூடிமுதல்வரைத் தேர்ந்தெடுத்து மாநில அரசே ஆளவேண்டும் என்றபொழுது அதற்கும் கவர்னர் இசைந்தார்.

அங்கு அமைச்சரவைகலைந்ததே தவிர சட்டமன்றம்கலைக்கப்படவில்லை.

இந்த இரு மாநில செய்திகளும் நமக்கு ஒன்றைப் புலப்படுத்துகிறது.

மத்தியிலும் மாநிலத்திலும் ஒரே கட்சி ஆளும் பொழுது மாநில முதல்வர் மீது விசாரணைக் கமிஷன் வந்தாலும் முதல்வர் முதல்வராகவே இருப்பார். மாநிலத்தை எதிர்க்கட்சிஆண்டால்அமைச்சரவை மட்டுமல்ல: சட்டமன்றமும் சேர்த்து கலைக்கப்படும். காங்கிரஸ் கட்சி ஆளும் மாநிலங்களில் அரசாங்கத்தை எதிர்த்து காவலர்களேபோர்க்கொடி உயர்த்தியபோது கூட சட்டம் ஒழுங்கு கெட்டிருக்காது. எதிர்க்கட்சி ஆளும் மாநிலங்களில் அப்படியல்ல சட்டம் ஒழுங்குக்கு புது விளக்கம் வியாக்கியானம். இவைகள் எல்லாம் தமிழகமுதல்வர் எம். ஜி. ஆர். அவர்களுக்கு எங்கே புரியப்போகிறது? ஆனால் நாடு புரிந்து கொள்ள ஆரம்பித்துவிட்டது என்பதை முதல்வர் புரிந்து கொள்ள வேண்டும்.

வந்த மடல்

ஆசிரியர் அவர்கட்கு,
வணக்கம்.

'நம் நாடு' இதழைத் தொடர்ந்து படித்து வருபவர்களில் நானும் ஒருவன்.

கலைஞரின் கற்கண்டு நிகர் சிறு கதைகளை எத்தனை முறை படித்தாலும் திகட்டவில்லை,

'புனிதராஜ்யம்' தொடர் நாடகம் 26.11:78 இதழில் இடம் பெறாதது எனக்கு ஏமாற்றத்தைத் தருகிறது. புதிய தொடர் கதை எழுதுவதாகக் கலைஞர் அறிவிப்பு அறிவிப்பாகவே நின்று விட்டது. என்னைப் போன்றவர்களுக்குப் பெரிதும் ஏமாற்றத்தையே அது ஏற்படுத்தி விட்டது.

அன்றாட அரசியல் சம்பவங்களை ஒட்டி எழுதப்பட்டுவரும் கட்டுரைகள் கூடும் சுவையுமாக உள்ளன.

கேலிச் சித்திரம் உள்ளபடியே நகைச் சுவையாக உள்ளது

இப்படிக்கு,
தி, சம்பத்
18. சிரசண்ட் தெரு,
சென்னை—36.

அன்புள்ள ஐயா—

கலைஞரின் 'புனிதராஜ்யம்' நாடகத்தைத் தொடர்ந்து படித்து வரும் ஆயிரக்கணக்கான வாசகர்களில் நானும் ஒருவன்.

26-11-78 தேதிய 'நம் நாடு' இதழை வழக்கமான ஆர்வத்தோடு பிரித்த நான் 'புனித ராஜ்யம்' நாடகம் இல்லாததைப் பார்த்துப் பெருத்த ஏமாற்றம் அடைந்தேன்.

அடுத்த இதழிலிருந்து கலைஞரின் படைப்பு தொடர்ந்து இடம் பெறும் என்று நம்புகிறேன்.

இப்படிக்கு
எஸ். சையது அமீர்,
மக்கான் தெரு,
திண்டுக்கல்.

அன்புள்ள ஐயா.

'நம் நாடு' தொடர்ந்து ஆவலுடன் படித்து வரும் நான் தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் தீட்டும் 'புனித ராஜ்யம்' தொடர் நாடகம் சென்ற இதழில் (26-11-78) இடம் பெறாதது கண்டு மிகுந்த ஏமாற்றத்திற்கு ஆளானேன்,

கலைஞரின் கைவண்ணம் கண்டால்தான் என் ஏமாற்றம் நீங்கும்,

இப்படிக்கு
இரா, பாலகிருட்டிணன்,
சண்முகபுரம்,
பழனி.

(நிவாரணநிதி 8-ம் பக்கத் தொடர்ச்சி)

மதுரை—1 பி. முகைதீன், டி பாரி. இந்திரா நகர் எஸ் செல்வராஜ் ஆகிய 3 பேர் ரூ 7— வீதம்	21	00
கோவை. கோபி பி பி நடராசன் மதுரை பிடி இராசன். சாலிகிராமம் எம் கோபால், சென்னை—1 பி ஜே துரைசாமி, ஈரோடு—1 கோமதி அரசு விருதுநகர்—1 க முருகேசன், ஆகிய 6 பேர் ரூ 6— வீதம்	36	00
ஆற்காடு மு கிருட்டிணமூர்த்தி (5 55) மாயூரம் சுகுமார் (5-55). புரசைவாக்கம் கே. முருகேசன் (5—50) ஆயிரம்விளக்கு மினர்வா சலவை நிலையம் (5 50) மாம்பாக்கம் எஸ ஞெ்கநாதன் (5 11) ஆகிய 5 பேர் ரூ 5—வீதம்	27	21
வ ஆ மிட்டூர் ஜி அசோகன். தருமபுரி ஆர் சின்னதம்பி, திருச்சி எம் சின்னராசு கோவிலூர் விஜயலட்சுமி திருச்சி—8 சி கோபால், தெ ஆ. பொன் கருணாநிதி (5 05), சென்னை—5 ஆர் ஜெயராஜ், ஆ வி அருணாசலம், எஸ் இராமபத்திரன். மதுரை—9 எம் எம் கணேசன், கே லட்சுமிபதி ம வைரபெருமாள் ஆகிய 12 பேர் ரூ 5—வீதம்	60	05
ஆகமொத்தம் ரூ.	92,155	11

தொலைபேசிஎண் கடை: 33213 இல்லம் 31922
நாம்நாடுவோர்தவறாமல்நாடுவது
தமிழக எண்ணெய்ப் பலகாரம்
தயாரிப்பு: விற்பனை நிலையம்
92. திருப்பரங்குன்றம் சாலை மதுரை 11
தனிச்சிறப்பு: சிலேபி. தெக்கத்திமிட்டாய், அதிரசம், இனிப்புசேவு, பக்கவடா, மிக்சர், முருக்கு, கடலை நவதானியம் மற்றும் இனிப்புகாரவகைகள்

உரிமையாளர்
பே. தேவசகாயம்
கிளைகள்: 261. மேல்மாசி வீதி, 70. சுவாமி சன்னதி 12. அழகர்கோவில் சாலை. 72 C டவுன்ஹால்ரோடு, மதுரை.

இலக்கிய அலைகள்!

கொலைகள்!
கொள்ளைகள்!
கற்பழிப்பு!
தளர்ந்து தள்ளாடும் சட்டம் ஒழுங்கு!
இவை தமிழ் நாட்டின் ஒப்பனைகள்!

அமைதியின் முகத்தில் வீழ்ந்த அம்மை முத்துகள்!

ஜனநாயகத்தின் நரம்புகளுக்கு ஏற்பட்ட பாரிச வாயு!

ஒப்பற்ற அரசியல்வாதிகள்
ஓய்வில்லாமல் சிந்திக்கும்
நாணயமான சிந்தனையாளர்கள்!
வடிவம் தந்த தமிழகத்தில்தான்
கடிவாளம் இல்லாமல்
கயமை ஓடுகிறது!
முடிவு தெரியாமல்
நீதி தேம்பி அழுகிறது!

அண்ணாவும் பெரியாரும் உலகத்தின் அன்பளிப்புகள்!

அவர்கள் இருட்டுக்கு முன்னால் ஏற்றி வைக்கப்பட்ட அடையாள வெளிச்சங்கள்!

இலக்கியத்திலிருந்த தமிழகத்தை உலகத்தின் முன்னால் "கண்டு பிடிப்பாக"ச் சுட்டிக் காட்டிய மேதைகள்!

அவர்கள் புழங்கிய தமிழகத்தில்தான் ஆட்சி கண்ணவிந்து போய்விட்டது!
சபல புத்தியின் காரணமாகச் சறுக்கி வீழ்ந்தது தமிழகம்
விளைவு! வளைவுக்குள் நேர்க்கோடு நேர்மை தவறியது?

கவர்ச்சி சதுப்பு நிலத்தில் தமிழன் களையாக முளைத்துவிட்டான்!

நாடு காடாயிற்று!
அக்கறையற்ற முதலமைச்சர்!
ஆணவத்தின் உச்சியில் அவர் பேச்சு'
கேட்பாரற்றுக் கிடக்கும் பாமரமக்கள்
திமிர் பிடித்த அதிகார வர்க்கம்

இவைகளை வைத்துக்கொண்டு—எந்த
இரவில் தமிழன் இன்பக்கனவு
காணப்போகிறான்!

★ கவிஞர் குடியரசு ★

பொய் வழக்கும்—சதி வழக்கும் போட்டு விட்டால் புளி விலை குறைந்துவிடும் என்று எண்ணுகின்ற முதலமைச்சர்—ராஜாங்க ராஜ்பாட்டையில் நெடுந் தொலைவு போக முடியாது!

அவரை அங்குலம் அங்குலமாக அரசியல் உன்னிப்பாகக் கவனிக்கிறது. அவரின் நிழலையும் நீதி அளந்துகொண்டிருக்கிறது.

வெறும் அடியாளை வைத்து வெண்கொற்றக் குடையின் நிழலை அனுபவித்து விடவாம்...போலீசை வைத்துக் கொண்டே ஆட்சிக் கட்டிலில் அதர பானம் பருகிவிடலாம் என்று நினைத்து விட்டால் கலைஞரின் கணக்குக் கேள்வித்தாள் தேர்வில் சைபர் மார்க்குதான் வாங்க வேண்டும்.

இந்த நாட்டை 'ஜனநாயகம்'' எம். ஜி. ஆரிடம் ஒப்படைத்து இருந்தாலும்—இந்த நாட்டின் ''இலக்கியம்'' மக்களை கலைஞரிடம் ஒப்படைத்து இருக்கிறது-

ஆட்சி அதிகாரத்தின் ஆயுள் அற்ப
ஆயுள் ''இலக்கிய அலைகள்'' இது
வரையில் செத்ததில்லை.

வழக்கைப் போட்டு விட்டு வழுக்கிவிழும் முதலமைச்சர் கலைஞரை ஒழிக்கத்திட்டம் போடுகின்ற முயற்சியை விட்டு விட வேண்டும்.

காழ்ப்புணர்ச்சியில் நிலவு கருகி
விடுவதில்லை. கலைஞர் சமுதாயமே
தனிமனிதன் அல்ல!

தமிழ் இருக்கிற வரையில் தானைத் தலைவர் கலைஞர் அவர்களின் தோற்றத்தின் திருவுருவம் மறையாது மங்காது!

தவறிப் போய் தங்சத் தொட்டிலில் விழ்ந்து செத்து விட்ட எலிகள்—ஜனநாயகத்தின் நுரை ஈரலை திக்குமுக்காட வைத்திருக்கிறது!

தூக்கம் தெளிந்தது—துக்கம் தெளிய இருக்கிறது.

ஆக்கம் தரக் கலைஞர்
அணிவகுக்க நீங்கள்
இடையிலே நானெதற்கு!

★

வீட்டைத் துறந்தாலும் நாட்டைத் துறந்திட மாட்டோம்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

117 வது பிரிவுப்படி குற்றஞ் சாட்டப்பட்டு—இரண்டாண்டு கடுங்காவல் தண்டனை கொடுத்தார்கள். சிறையில் 'சி' வகுப்புதான் கொடுத்தார்கள் களிதான் சாப்பிட வேண்டும் என்றார்கள். வழக்கறிஞர் இரங்கராமாநுசம் எனக்காக வாதாடினார். சிறையில் எனக்கு உயர் வகுப்புத் தர வேண்டும் என்று அவர் வாதாடியும், மாதவராவ் என்னும் நீதிபதி அதற்கு மறுத்து விட்டார். வேலூர் சிறையில் வைக்கப்பட்டேன்.

இந்தி மொழி இந்தியாவுக்குப் பொது மொழியாவதற்குத் தகுதியான மொழியா? என்பதை நீங்கள் சிந்திக்க வேண்டும். ஒரு சிறு தகுதி கூடக் கிடையாது. இந்தி மொழி 500 ஆண்டுகளுக்கு முன்னாலே தான் வந்தது. இதிலேயும் 11 பிரிவுகள் இருக்கின்றன. அந்த 11 பிரிவுகளிலேயேயும் 3 வகைகளாகப் பிரிந்திருக்கிறார்கள். மேல் நாட்டு இந்தி—கீழ்நாட்டு இந்தி, பீகாரி இந்தி என்று அந்த மூன்று வகையில் ஒருவன் இந்தி மைதிலி என்ற ஓர் இந்தி அந்த இந்தியிலேதான் துளசிதாசர் இராமாயணம் எழுதினார் அந்த இந்திதான் இப்பொழுது வருகிறது.

முதலில் சொன்ன மூன்று வகை இந்தி இருக்கிறதே அதில் ஒரு இந்தியில் பேசினார் இன்னொரு இந்திக்காரனால் புரிந்து கொள்ள முடியாது இதனை வட நாட்டில் இன்றைக்கும்பார்க்கலாம். மார்க்கெட்' பாஷை என்கிறார்களே அதுதான் இந்தி இதற்குச் சொந்த எழுத்து கிடையாது, வட மொழிச் சொல்லையும் பிராகிருத மொழிச் சொல்லையும் வைத்துப் பிழைப்பதுதான் இந்தி, வேறொன்றும் கிடையாது அத்தகைய இந்தியை இங்கு கொண்டு வந்து வைக்க வேண்டும்—இந்தியாவின் மொழியாக்க வேண்டும் என்பதற்கு என்ன காரணம் என்று கேட்டால். இந்தியாவினுடைய ஒற்றுமைக்காக வேண்டியும், அவர்களுடைய நாட்டுக்காக வேண்டியும் புகுத்துகிறார் என்று போலித் தன்மையைக் காட்டுகிறார்கள் ஆனால் இந்தியாவிலே தகுதி வேண்டாமா அதற்கு?

மொழியினுடைய அழகிலே தமிழுக்கு நிகரான ஒரு மொழி கிடையாது அன்பர்களே! எப்படி? மொழியை அமைத்திருக்கின்றார்களே உயிரென்றும் மெய்யென்றும் உயிர் மெய்யென்றும், இப்படிப் பாகுபடுத்தி, உயிர் மெய்யில் ஏறி உயிர் மெய்யாக ஆகிறது என்ற முறைப்பாடு எந்த மொழிக்கும் இல்லை,

இந்த இந்திக்கு என்ன இருக்கிறது? எழுத்தும் கிடையாது. இலக்கணமும் கிடையாது. இதனுடைய தாய் இருக்கிறதே சவ மொழி அதற்கும் எழுத்தே கிடையாது: இது பொய்யல்ல. ஏனென்றால் அதற்குச் சுருதி என்று பெயர். சுருதி என்றால் காதாலே கேட்டது என்று பொருள், அந்த மொழிக்குப் பிறகு வந்த தேவநாகரி என்ற எழுத்தைக் கொண்டு வந்தார்களே தவிர, அதற்கென்று எழுத்து கிடையாது,

ஆனால் நம்முடைய தமிழுக்கு ஆதியிலிருந்து இதுவரையில் ஒலி வடிவும்—வரிவடிவும் ஆகி சில வடிவாகத் திகழ்ந்து கொண்டிருக்கக் கூடிய நிலை இன்னும் மாறியதே கிடையாது:

செத்த ஆரிய மொழியை உயிர்த்து மீட்டி வந்து உலகை ஆள எண்ணுதல் என்ன மடமை? என்று கேட்டேன். சின்னஞ்சிறுவரைக் கொலைபண்ண இந்தியைப் புகுத்துதல் என்ன மடமை?

அன்னை மொழியோடு மற்றும் ஆங்கிலப் பாடத்தையும் கற்று இன்னலடையும் சிறுவர்க்கு இன்னும் இந்தியைச் சுமத்தல் என்ன மடமை?

கண்ணை மூடிப் பால் குடித்தால் உலகம் தெரியாதென்று எண்ணும்வஞ்சப் பூனைபோல் மைக்கண்ணாடி போட்டு ஏமாற்றுதல் என்ன மடமை?

உண்ணும் விடப்பாம்பு உலகில் நல்ல பாம்புஎன்றாலும் சீறின் கல்லினைக் கொண்டடியாரோ, பல்லினைப் பிடுங்கிடாரோ என்ன மடமை? என்று கேட்ட அந்த அருணகிரிநாதன்தான் இன்னும் இருக்கிறேன்.

★

உறங்கடா தமிழா!

[போ. வே. தமிழ்மணி]

உறங்கடா தமிழா உறங்குநீஇவ்
உலகம் எப்படிப் போனால்என்
(உறங்கடா)

உழுவோர் உதைதான் பட்டாலென்
உயர்ந்தோர் வாழ்வை யிழந்தாலென்
அழுவோர் மேலும் அழுதாலென்
அயர்ந்தோர் மேலும் அயர்ந்தாலென்
அழகிய நாடிது அழிந்தாலென்
அயலோர் கையில் விழுந்தாலென்
பழியும் பயமும் ஆழ்ந்தாலென்
பண்பும் நஞ்சாய்ப் போனாலென்
(உறங்கடா)

கல்லடி இங்கே பொதுநெறியாம்
கம்பே இங்கு செங்கோலாம்
சொல்லடி கேட்டல் உன்கடனும்
சோர்வே இனிமேல் நன்னெறியாம்
கல்விச் சாலைகள் உனக்கில்லை
கண்ணியத் தொழில்களும்
உனக்கில்லை
தொல்லை தான்உன் தலைவிதியாம்
தெருவோரம்உன் குடியிருப்பாம்
(உறங்கடா)

கடும்புலி வாழும் காடானது
கன்னித் தமிழர் நாடிதுவே
கபவர் கூட்டம் சதிராடும்
கவலை உனக்கேன் கண்ணுறங்கு
விடுதலை உனக்கேன்—வீண்பேச்சு
வீரமும் கற்பும் வெறும்பேச்சு
வியப்பில்லை வழியில்லை வயிற்றுக்காய்
விலைகூறுனது மானத்தை
(உறங்கடா)

விழித்திடு என்போர் வீணர்காண்
வீறுகொள் என்னும் சதிக்கூட்டம்
பழித்திடு தமிழர் பண்பாட்டை
பணித்திடு அயலவர் பதந்தன்னை
சொரணை என்ப தினியெதற்கு
சோறென் றேயினி குறிக்கோளாம்
வறுமை போக்கவும் விலையுண்டாம்
வாய்மை! தவறல்! அதன் பெயராம்!
(உறங்கடா)

நாடாளுமன்றத்தில் ஒலித்த குரல்

நாடாளுமன்ற குளிர் காலக் கூட்டத் தொடரும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. நடைபெறுகின்ற நாடாளுமன்றக் கூட்டத் தொடரில் அன்னை தமிழை இந்தியாவின் ஆட்சிமொழியாக்கிட அரசியல் அமைப்புச் சட்டத்தைத் திருத்தும் மசோதா ஒன்றினை முரசொலி மாறன் அவர்கள் மாநிலங்களவையில் அறிமுகம் செய்துள்ளார்.

அவரைத் தொடர்ந்து வை. கோபால்சாமி அவர்கள் அரசியல் அமைப்புச் சட்டத்தை இந்திய மொழிகளில் மொழி பெயர்க்கும் ஏற்பாட்டிற்கு வகைசெய்யும் மசோதாவின் மீது உரை நிகழ்த்தும் பொழுது இந்தி வெறியர்களின் பிடறி மயிரை பிடித்து குலுக்கி முழக்கமிட்டார்.

இந்தியை எதிர்த்து — இந்தித் திணிப்பை எதிர்த்து இந்தி வெறியர்களின் ஆணவப் போக்கினை எதிர்த்து வை. கோபால்சாமி பேசியது முதலில் நடைபெற்ற நிகழ்ச்சியாக நடந்தேறியது.

தமிழை ஆட்சி மொழியாக்கிடவேண்டி அரசியல் சட்டத்தினை திருத்த கோரும் மசோதா அதனை தொடர்ந்து வந்துள்ளது

ஒன்றுநாம்இந்தி ஆதிக்கத்தினை எதிர்ப்பதை நிலை நிறுத்துகிறது.

மற்றொன்று நாம் கண்மூடித்தனமாக இந்தி எதிர்ப்பு என்பதனை கைக்கொள்ளவில்லை தமிழை ஆட்சி மொழியாக்கிட வேண்டும் என்பதனை வலியுறுத்துகிறோம் என்பதனை உலகிற்கு அறிவிக்கின்றது.

தோழர் வை. கோபால்சாமி அவர்கள் ஆங்கிலம் ஒரு அந்நிய மொழி என்ற இந்தி ஆதிக்கவாதிகளின் வாதத்தினை முறியடித்துப் "பீகார் மக்களுக்கு ஆங்கிலம் அந்நிய மொழியென்றால் உத்திரபிரதேச மக்களுக்கு ஆங்கிலம் அந்நிலை மொழியென்றால் உத்திர பிரதேச மக்களுக்கு ஆங்கிலம் அந்நிலை மொழியென்றால் தமிழர்களாக்கிய எங்களுக்கு இந்தியுக் அந்நிய மொழிதான்" என தொடர்ந்து முழங்கியுள்ளார்.

இந்தி வெறியர்களின்மனப் போக்கினை உணர்ந்து வைத்திருக்கின்ற தி. மு. கழகத்தின் கருத்தினை உரைத்திட முயலும் முன்னர், ரோம் சாம்ராஜ்யம் வீழ்ந்ததற்கான காரணங்களில் அந்த சாமராஜ்யத்தின் மொழிக்கொள்கையும் ஒன்று என வரலாற்று ஆசிரியர் அர்னல்ட் டியன் கூறியதை மேற்கோள் காட்டியுள்ளார்.

ரோம சாம்ராஜ்ய வீழ்ச்சியுடன் அவர் நிறுத்திடவில்லை, பிற மொழிகளின் ஆதிக்கத்திலிருந்து தன் மொழியை விடுவிக்க விரும்பி போராடிய துருக்கியின் தலைவன் முஸ்தபா கமால் பாட்சாவின் முயற்சி வெற்றி பெற்றதை எடுத்துக் கூறினர்,

அதேபோன்று ஆங்கில மொழியின் ஆதிக்கத்திலிருந்து தன் மொழி விடுதலைக்குப் போராடிய அயர்லாந்து தேசத்து டிவேலராவின் முயற்சியினையும் கூறினர்.

நாடெங்கும் ஒலிக்கட்டும்!

திருச்சி சக்ரவர்த்தி

இந்தி ஆதிக்க எதிர்ப்பே கூட அன்னை தமிழை அரியணையேற்ற வேண்டும்—அந்நிய மொழிகளின் படையெடுப்பை தடுத்திட வேண்டும்—ஆதிக்கம் புரிய நினைப்போரை அடக்கிட வேண்டும் என்ற எண்ணங்களின் அடிப்படையில் எழுந்ததுதான்.

இந்தி எதிர்ப்பு முழக்கத்தினை தொடர்ந்து அன்னைத் தமிழை ஆட்சி மொழியாக்கிட கோரும் அரசமைப்புச் சட்டத் திருத்த மசோதா வந்துள்ளது,

நாடாளு மன்ற மாநிலங்களவையில் தோழர் முரசொலி மாறன் அறிமுகப் படுத்தியுள்ள அரசியமைப்பு சட்ட திருத்த மசோதாவின் முக்கிய பகுதிகளை இங்கே குறிப்பிடுவது சாலப் பொருத்தம்.

"இந்தி மட்டுமே ஆட்சி மொழியாக இருப்பதை பொது மக்கள் ஏற்றுக் கொள்ளவில்லை என்பதனை மக்கள் கிளர்ச்சி நிரூபித்து வருகிறது.

பொதுவாக இந்திய மொழிகளும் குறிப்பாக அரசியல் சட்டத்தின் எட்டாவது அட்டவணையில் உள்ள மொழிகளும் (1) இந்திய – ஆரிய குடும்பம் (2) திராவிடக் குடும்பம் (3) ஆகிய இரண்டு மொழிக் குடும்பங்களைச் சேர்ந்தவையாகும்.

இந்த இரு மொழிக் குடும்பங்களுக்கும் இந்தி இணைப்பு மொழியாக இருக்க முடியாது முதலாவது குடும்பத்தைச் சேர்ந்த இந்தி இப்போது இந்தியாவின் ஆட்சி மொழியாக இருக்கிறது.

இரண்டு மொழிக் குடும்பங்களுக்கும் சமத்துவம் தரப்பட வேண்டுமானால் திராவிட மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த மெசழியொன்று உடனடியாக இந்தியாவின் ஆட்சி மொழி என்று பிரகடனப் படுத்தப்பட வேண்டும்.

அதனால்தான் அந்தப்பணியில் முதல் முயற்சியாக இந்த மசோதா தமிழ்மொழியையும் இந்தியாவின் ஆட்சிமொழி என்று அறிவிக்கிறது.

ஏனெனில் தமிழ் நவீன திராவிட மொழிகளில் வேறு எதையும்விட மிகவும் தொன்மையானதாகும்.

இந்தியாவின் ஆட்சிமொழியாக இந்தி வருவதை தமிழ்நாடு முழுமையாக எதிர்க்கிறது. இந்நிலையில் இந்தியாவின் ஆட்சி மொழியாக தமிழையும் அறிவித்து விட்டால் இந்தியாவின் மொழிப் பிரச்னையில் தீர்வு காண்பது எளிதாகி விடும்.

இம்மசோதா இந்தியாவில் ஒரு மொழி மீது மற்றொரு மொழியின் ஆதிக்கம் என்ற நிலை அறவே ஒழிய வழிவகுக்கிறது.

இந்திய மக்களிடையே வெறுப்புணர்வை வளர்க்கக் கூடிய 'இந்தித்திணிப்பு' என்னும் நிலைமாற்றி எல்லா மொழிகளும் சமநிலைபெற்றிட ஒரு வாய்ப்பினை உருவாக்குகிறது.

ஆகவே திராவிட முன்னேற்ற கழகம் இந்தி எதிர்ப்பு மாநாடுகூட்டுகின்ற இந்நேரத்தில் இந்திய ஒற்றுமைக்கு ஆதரவாக இந்திய அரசியல் தலைவர்கள் மொழிப்பிரச்சினையில் தங்களது கருத்தினை அறிவிப்பார்கள் எனத் தமிழ்நாடு எதிர் நோக்குகிறது

இந்தி எதிர்ப்பு மாநாடு கூடுவதற்கு முன்னதாக நமது உரிமைக்குரல் நாடாளுமன்றில் ஒலிக்கிறது.

இந்தித் திணிப்பை
தவிர்ப்பீர்!
தமிழை இந்திய
ஆட்சி மொழியாக்குவீர்!
இந்திய ஒற்றுமையைக்
காப்பீர்!',

நாடாளுமன்றத்தில் ஒலிக்கும் நமது குரல் நாடு பூராவும் ஒலிக்கட்டும்!

புனித ராஜ்யம்...

(முதற் பக்கத் தொடர்ச்சி)

பட்டிக்காடு கிராமங்கள்ள இருக்கிறபொண்ணுகளுக்கு இப்படித்தான் பிசாசு பிடிச்சு, அதுங்க புத்தியையே கெடுத்துப்பிடுது

நொண்டி: ஆமா! இப்ப அந்தப் பிசாசு எங்கே போயிருக்கும்?

சுந்தரி: அது இந்நேரம்; சென்ட்ரல், எக்மோர் ஸ்டேஷன்ல போயி ரயிலேறியிருக்கும்! கிராமங்கள்ள எந்த சொக்கியாவது கிடைக்க மாட்டாளான்னு தேடிகிட்டுப் போயிருக்கும்.

அண்ணாச்சி: கேவலம் ஒரு பிசாசு பண்ணின வேலையால நம்ப ஒருத்தரை ஒருத்தர் தவருப் புரிஞ்சுகிட்டோம்! இல்லியா சுந்தரி? (அவளருகே வருகிறான். அவள் நாணிக்கோணி புன்சிரிப்புடன் நகருகிறாள். நொண்டி முகத்தில் சிறிது அசடு வழிகிறது ஆனாலும் சமாளித்துக் கொள்கிறான்.)

சுந்தரி: (அண்ணாச்சியைப் பார்த்து) என்னங்க! நான் ஒண்ணு கேக்கிறேன். தப்பா எடுத்துக்க மாட்டீங்களே!

அண்ணாச்சி; எது வேணுமானாலும் கேளு! உன் வாய்முத்து எப்ப உதிரும்னுதானே எதிர் பார்த்துகிட்டு இருக்கேன்.

சுந்தரி: ஒண்ணுமில்லை! உங்கபின்னாலே போலீஸ் வந்திருக்கே? ஏனுங்க? ஒருவேளை உங்களை அரஸ்டு பண்ணிக் கொண்டு போறாங்களா? அந்த வழியிலே இங்கே வந்தீங்களா?

அண்ணாச்சி: சே! சே எங்களை அரஸ்ட் பண்றதாவது பண்ணிறதெரியுமா சேதி? நாங்க கைது செய்யப்பட்டதாகக் கேள்விப் பட்டாலே உடனே எங்க படை வீரர்கள் போலீஸ் ஸ்டேஷனை முற்றுகையிடுவார்கள்! இந்தச் சில வருஷக் காலத்திலே அப்படி முற்றுகையிடப்பட்ட போலீஸ் ஸ்டேஷன்கள் எத்தனை தெரியுமா? மண்டியிட்டு மன்னிப்புக்கேட்டு எங்கள் படைத் தளபதிகளை விடுதலை செய்த போலீஸ் அதிகாரிகள் எத்தனைபேர் தெரியுமா? இந்தப் புனித ராஜ்யத்திலே பகவானே போலீஸ் அதிகாரியா அவதாரம் எடுத்து வந்தால்கூட பச்சை குத்திய வீரனைக் கைது செய்ய முடியாது! கையால் தொடக்கூட முடியாது'

சுந்தரி! மன்னிக்கணும்! மன்னிக்கணும்! ஒருவேளை நீங்கள் துணை அமைச்சரா ஆயிட்டீங்களா? அதான் போலீஸ் பாதுகாப்பா?

அண்ணாச்சி: ஹ ஹ ஹ! அது என்ன பெரிய காரியம், துணை அமைச்சர் பதவி? .. நினைச்சா கிடைக்கும்! நாங்க அதைபத்தி நினைக்கவே இல்லை........

சுந்தரி: நின்னுகிட்டே இருக்கீங்களே........ உக்காருங்களேன்...

அண்ணாச்சி: ஓ உக்காருவது என்ன – உறக்கமே இன்னைக்கு இங்கதான்! இல்லியா நொண்டி?

நொண்டி: உறக்கத்தோட சரியா...?

அண்ணாச்சி: அட, ஒரு பேச்சுக்குச் சொன்னேன்ப்பா' ....சொக்கி இருக்கிறஇடம்; சொர்க்கலோகமில்லியா?

(பிறகு அண்ணாச்சி போலீஸ்காரர்களைப் பார்த்து)

அண்ணாச்சி: நீங்க போகலாம் .....

நொண்டி: ஆமாம்! உங்ககிட்ட நாங்க சொன்ன எடம் இதுவல்ல! ...அந்த நரகலோகத்தின் அட்ரசைத் தவற விட்டுவிட்டோம்! ... நீங்க போய் வாருங்கள்...

[போலீஸ்காரர்கள் இருவரும் கடுகடுத்த முகத்துடன் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டு அந்த வீட்டை விட்டு வெளியேறுகிறார்கள்]

பாலம்மாள்: நீங்க...ஆனந்தமா பேசிகிட்டு இருங்க! அறையிலே எல்லாம் ரெடியா இருக்கு – நான் அடுப்பங்கரையிலே போயி படுக்கிறேன். சொக்கிம்மா! சுந்தரிக்குட்டி! ஒழுங்கா நல்ல பெண்ணா நடந்துகிட்டுப் புத்திசாலின்னுபேர் எடு...

சுந்தரி: (சரியென்று தலையசைக்கிறாள்)

பாலம்மாள்: அடுக்களைப் பக்கம் போகிறாள்.

(15 வது காட்சி முடியவில்லை)

(தொடரும்)

திருச்சி அண்ணா அரங்கில்

இந்தி எதிர்ப்பு மாநில மாநாடு

டிசம்பர் 23, 24 சனி, ஞாயிறு ஆகிய நாட்களில்

தலைவர்:
புலவர் கோவிந்தன்
எம். ஏ., எம். எல். ஏ.
முன்னாள் சட்டப் பேரவைத் தலைவர்

திறப்பாளர்:
வை. கோபால்சாமி
எம்.ஏ., பி.எல்., எம். பி.

கழகத் தலைவர் கலைஞர்

பொதுச்செயலாளர்
பேராசிரியர்

பொருளாளர் சாதிக்

துணைப் பொதுச்செயலாளர்
ஏ. வி. பி. ஆசைத்தம்பி

மற்றும் கழக முன்னணியினர்
பங்கேற்பர்

படத்திறப்பு:

பெரியார் — முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம்
அண்ணா — கி. வீரமணி எம். ஏ., பி. எல். (பொதுச்செயலாளர், திராவிடர்கழகம்)
பாரதிதாசன் — கவிஞர் முடியரசன்
அழகிரி — மன்னை நாராயணசாமி
இராமமிர்தம் அம்மையார்: — அலமேலு அப்பாத்துரை
தீக்குளித்த தியாகிகள் — இளம்பரிதி எம். எல். சி.

மாநாட்டு அமைப்புக்குழு

1) எம். எஸ். மணி
2) எம். எஸ். வெங்கடாசலம் எம். ஏ., பி. எல்.
3) கு. காமாட்சி
4) ஏ. வி. கிருஷ்ணமூர்த்தி
5) எஸ். வி. சாமியப்பன்
6) ஏ. மலர் மன்னன்
7) ஆ. துரைராசு (முன்னாள் எம்.பி.)
8) த. ஆறுமுகம் எம். எல். ஏ.
9) கே. எஸ். முருகேசன் எம். எல். ஏ.

நிதிக்குழு

1) தியாகராசன் (காடுவெட்டியார்)
2) எஸ். நடராசன் எம். எல். ஏ.
3) எம். பாலகிருஷ்ணன் (திருச்சி)
4) கு. பாலகிருஷ்ணன் (தஞ்சை)
5) சிதம்பரம் (புதுக்கோட்டை)

விளம்பரக் குழு

1) ஆர். நாகசுந்தரம் (முன்னாள் எம்.எல்.ஏ.)
2) ஜே. எஸ். இராசு, பி. ஏ. பி. ச. டி. முன்னாள் எம். எல். ஏ.

தொண்டர் படை

1) எஸ். ஏ. ஜி. ராபி தலைவர்
2) கிரை தமிழ்ச்செல்வன் துணைத்தலைவர்

தாழை மு. கருணாநிதி, பெரியண்ணன்
மாநாட்டுச் செயலாளர்கள்:

அன்பில் தருமலிங்கம்
வரவேற்புக்குழுத் தலைவர்

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக ஆசிரியர் மு. கருணாநிதி அவர்களால், அழகிரி அச்சகத்தில் (156 சூரியநாராயணசெட்டி தெரு, இராயபுரம் 600013) அச்சிட்டு வெளியிடப்பட்டது. நிர்வாக அலுவலகம், 'அன்பகம்' 508 அண்ணாசாலை, தேனாம்பேட்டை, சென்னை-600018 தொலைபேசி: 441009